Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 165 | திங்கட்கிழமை | சித்திரை 27 ஆம் நாள் 10 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## கோண்டாவிலில் ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், மே 10

கோண்டாவிலில் உள்ள வீடொன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பலாலி விமான நிலைய 15 ➤

# மே 18 நினைவேந்தல் திட்டமிட்டபடி நடக்கும்

### நினைவேந்தல் குழுவின் இணைத்தலைவர் உறுதி

யாழ்ப்பாணம், மே 10

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சுகாதார சட்டதிட்டங்களைப் பேணிய வகையில் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.

இது தொடர்பில் உதயனுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; 15 ➤

## இரண்டாவது கர்ப்பிணி கொவிட் தொற்றால் சாவு

கொழும்பு, மே 10

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்த மேலும் ஒரு கர்ப்பிணிப் பெண் உயிரிழந்துள்ளார். காலி, கராம்பிட்டி மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த கர்ப்பிணிப் பெண்ணே உயிரிழந்துள்ளார். நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த இரண்டாவது கர்ப்பிணிப் பெண் இவராவார். 15 ➤

## யாழில் மற்றுமொருவர் கொரோனாவுக்குப் பலி

யாழ்ப்பாணம், மே 10

கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த உயிரிழப்புடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. 15 ➤

## நினைவேந்த ஒன்றுகூடினால் மறுபேச்சின்றி கைதாவீர்கள்!

### மிரட்டுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 10

எதிர்வரும் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்காக முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள், அரசியல்வாதிகள் என்று எவர் ஒன்றுகூடினாலும் அனைவரும் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள். இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் 15 ➤

## 2,672 பேருக்குத்தொற்று

கொழும்பு, மே 10

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு இலக்கான 2 ஆயிரத்து 672 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொவிட் தடுப்புச் செயலணி 15 ➤

## யாழில் 15 பேருக்குத் தொற்று; வடக்கில் 21 பேர் அடையாளம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 15 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் 21 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். 15 ➤

## கைதடியில் உணவக உரிமையாளருக்கு தொற்று

கொடிகாமம், மே 10

கைதடியில் உள்ள பிரபல சைவ உணவகத்தின் உரிமையாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். 15 ➤

## யாழ். மேலதிக செயலருக்கு கொரோனாத் தொற்று உறுதி

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர் (நிர்வாகம்) ம.பிரதீபன் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி, கிருஸ்ணபுரம் கொவிட் சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் பெறப் 15 ➤

## கர்ப்பிணிகளை பணிகளுக்கு அழைப்பதை தவிர்க்க முடிவு!

### அவசியமான பணியாளரையே அழைக்குமாறு சுற்றறிக்கை

கொழும்பு, மே 10

வரையறுக்கப்பட்ட அத்தியாவசிய ஊழியர்களை அழைத்துக் கடமைக்கு அமர்த்தவும், கர்ப்பிணிகளை பணிக்கு அழைப்பதைத் தவிர்க்கவும் அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தும் சுற்றறிக்கை இன்று வெளியாகவுள்ளது.

நாட்டில் தற்போதுள்ள கொரோனாத் 15 ➤

### முச்சந்தி முரளி



"எதுக்கு பாயாட்டியும் நினைவேந்தல் எண்டு வந்தவுடன கொரோனா சட்டங்கள் கடுமையா பாயுறது வடிவைதான் பாருங்கோ"

## வட்டுக்கோட்டை, நாவற்குழியில் கொவிட் சிகிச்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நாவற்குழியில் அமைந்துள்ள அரச களஞ்சியக் கட்டடம் என்பவை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்படவுள்ளன. அதற்காக அவை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள வயாவிளானில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றிலும் கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகின்றது. 15 ➤

## கைதடியில் நேற்று இரு விபத்துக்கள்!

யாழ்ப்பாணம், மே 10

நாவற்குழி பாலத்தில் நடந்த விபத்தில் கப் ரக வாகனம் கடுமையாகச் சேதமடைந்தது. இந்த விபத்து நேற்று மாலை நடந்துள்ளது. மழை பெய்துகொண்டிருந்த போது வீதியால் 15 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நிலைமைக்கு ஏற்ப நாட்டை முடக்க நேரிடலாம்

## தயாராக இருக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு பஸில் அறிவுறுத்தல்

**கொழும்பு, மே 10**

**நாட்டின் கொரோனாத் தொற்று நிலைமைகளை அவதானித்து நாட்டை முழுமையாகவோ அல்லது 75 சதவீதம் பகுதியாகவோ மூடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் ஜனாதிபதி செயலணியின் தலைமை அதிகாரிகளுக்கு அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தியாவசிய சேவை வழங்கும் நிறுவனங்களின் தலைவர்களும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது போன்ற சூழ்நிலைகளில் அத்தியாவசிய சேவைகளை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் அந்த நிறுவனங்க ளின் தலைவர்கள் நீண்ட விவாதம் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

எதிர்காலத்தில் நாட்டில் ஊரடங்கு உத்தரவுகளை நடைமுறைப்படுத்தாது, பயணக் கட்டுப்பாடுகளை மட்டும் அனுமதிப்பது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# இலங்கைக்கான கதவை மூடியது மலேசியா

கொழும்பு, மே 10

கொரோனாத் தொற்றுப் பரவல் இலங்கையில் அதிகரித்துள்ளதையடுத்து இலங்கையிலிருந்து பயணிகள் மலேசியாவுக்குள் நுழைவதற்கு நேற்றுமுன்தினம் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இராஜதந்திரக் கடவுச்சீட்டு உள்ளவர்கள் மாத்திரம் மலேசியாவுக்குள் நுழைய முடியும். (ஒ.இ)

# 21 கிராமங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, மே 10

நாட்டில் மேலும் 21 கிராம சேவகர் பிரிவுகள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் தொலோ கந்த, ரம்புக, கத்லான, தனபெல, இம்புக்கந்த மற்றும் பொத்துபிட்டிய, பனாகொல, குபுக்மிட்டிய, குடாவ, தெல்கொட கிழக்கு, தெல்கொட மேற்கு, தேவாலகம, கலஹாகம, கொஸ்வத்த, கபஸ்ஸர கந்த, வதுராவ, வெம்பிட்டியகொட, வெத்தாகல கிழக்கு, வெத்தாகல மேற்கு மற்றும் தவுலகலகம கிராம சேவகர் பிரிவுகளும், நுவரெலியா மாவட்டத்தில் புனித கும்ஹஸ் தோட்ட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை களுத்துறை மாவட்டத்தில் நாரம்பிட்டிய கிராமஅலுவலர் பிரிவுக்கு விதிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# 6,965 பேர் கைது

கொழும்பு, மே 10

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 6 ஆயிரத்து 965 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 426 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 114 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அரசியல்கைதிகள் விடயத்தில் கட்சிகள் இணைய வேண்டும்!

## அரசியல் கைதிகளின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

கல்முனை விவகாரத்தைப் போன்று அரசியல் கைதிகள் விடயத்திலும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் ஒன்றிணைந்து அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். இது ஒரு ஆரோக்கியமான அவசியமான முன்னெடுப்பாகும்.

அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் கட்சி பேதம் இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

மொத்தம் 79 அரசியல் கைதிகள் தற்போது நாட்டில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 25 முதல் கொண்டு 10 ஆண்டுகள் காலமாக அவர்கள் தொடர் சிறைத் தடுப்பை அனுபவித்துக் கொண்டுள்ள எமது பிள்ளகள் நிச்சமற்ற வாழ்க்கைச் சூழலை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுடன் இருந்த பல அரசியல் கைதிகள் நோய்களாலும், சிறைக் கலவரங்களாலும் மடிந்து போயுள்ளனர். 20க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் முகங்களைக் காணாமலேயே இறக்க நேரிட்டது.

அறிந்தோ, அறியாமலோ பொது நோக்கொன்றின் நிமித்தம் சுய வாழ்வை அடமானம் வைத்து நாளாந்தம் சிறைக்குள் சிதைந்து கொண்டிருக்கும் எமது பிள்ளைகளின் விடுதலைக்காக அனைத்துத் தமிழ் கட்சிகளின மக்கள் பிரதிநிதிகள் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பொதுப் பொறிமுறை ஒன்றை முன்வைத்து மனிதாபிமான அடிப்படையில் பேச்சு நடத்த வேண்டும் என்று கோருகின்றோம் என்றனர். (எ-26,20)

# மிகப்பெரிய சிகிச்சை நிலையம் விரைவில்

கொழும்பு, மே 10

இராணுவத்தினரின் மனித வலுவுடன் சீதுவையில் அமைக்கப்பட்டு வரும் மிகப் பெரிய கொரோனா சிகிச்சை நிலையம் விரைவில் திறக்கப்படவுள்ளது. தனியார் ஆடைத் தொழிற் சாலை வளாகத்தில் இந்த கொரோனா சிகிச்சை நிலையம் நிறுவப்பட்டு வருகின்றது.

சுமார் ஆயிரத்து 200 நோயாளிகளுக்கு சிகிச்சைய ளிக்கக் கூடிய வசதிகளுடன் இது அமைக்கப்பட்டு வருகின்றது. சகல வகையான சுகாதார வசதிகளையும் உள்ளடக்கியதாகவே இச்சிகிச்சை நிலையம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

இராணுவத்தளபதி நேரில் சென்று இதனை நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)



# 101 பேருக்கு செலுத்தப்பட்டது சீனத் தடுப்பூசி

கொழும்பு, மே 10

பாணந்துறையில் சீனாவின் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக 101 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று களுத்துறையின் பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் பிரசாத் லியனகே தெரிவித்துள்ளார். (ம-4)

# உயிரிழந்த நபருக்கு கொரோனாத் தொற்று

## 4 நாள்களின் பின்னரே அறிவிப்பு

உயிரிழந்த நபர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அது தொடர்பான தகவல் 4 நாள்களின் பின்னரே உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் திஸ்ஸமஹாராம ரபர்வத்தப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், நீரிழிவு நோய்க்கான சிகிச்சை பெறுவதற்காக, தெம்பரவெவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மூச்சுத்திணறல் இருந்தமையால், பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அவர் மறுநாள் உயிரிழந்து விட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். முடிவுகளில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவர்களின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக திஸ்ஸமஹாராம பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

அதற்கு உறவினர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் அச்சிடப்பட்ட போலி டொலர்கள்

## அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, மே 10
போலி நாணயத்தாள்களைப் போன்று, போலி டொலர்களும் நாட்டில் அச்சி டப்பட்டுள்ளன என்று அறியப்பட்டுள் ளதால், டொலர்களைப் பரிமாற்றம் செய்துவரும் நிதி நிறுவனங்கள், மிக வும் கவனத்துடன் செயற்பட வேண் டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.
கந்தளாய், அநுராதபுரம் மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் போலி நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டமை தொடர்பில் பலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் டொலர்களும் அச்சி டப்படுகின்றன என்று தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. 100 டொலர் பெறுமதியான நாணயத்தாள்களே போலியாக அச்சிடப்பட்டு வருகின்றன. அதனால் இது தொடர்பில் அனைவ ரும் கவனமாகச் செயற்பட வேண்டும். இது தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் 0112326670, 0112320145 ஆகிய இலங்கங்க ளைத் தொடர்புகொண்டு குற்றப் புல னாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள் ளார். (ம-4)

## 2 கிலோ ஹெராக்கெய்ன் பறிமுதல்

கொழும்பு,மே 10
60 மில்லியன் ரூபா பெறுமதியான 2.29 கிலோகிராம் ஹெரா க்கெய்ன் போதைப்பொருள், சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின ரால் கைப்பற்றப் பட்டுள்ளது.
கென்யா நைரோபியிலி ருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்த, தென்னா பிரிக்க பிரஜையிடமி ருந்தே மேற்படி போதைப் பொருள் மீட்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-4)

## சட்டவிரோதமான முறையில் எதனோல் கொள்கலன்களுடன் பாரவூர்தி மடக்கிப்பிடிப்பு

கொழும்பு, மே 10
போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி 5 ஆயி ரம் லீற்றர் எதனோல் அடங்கிய 25 கொள்கலன்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணி யளவில் அங்குனுகொல பெலஸ்ஸ நுழைவாயிலில் அதிவேக நெஞ்சாலைக்குள் நுழைந்த குறித்த பார வூதியின் மீது சந்தேகம் ஏற்பட்டு அதனை பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் மேற்படி கொள்க லன்களை கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபரு மான அஜித் ரோஹண தெரிவித்தார். (ச-இ)

## தரமற்ற மருந்துகளின் விற்பனைக்குத் தடை

கொழும்பு, மே 10
தரமானது என்று உறுதிப்படுத்தப்படாத ஆயுள் வேத மருந்துகளை விற்பனை செய்வதும், விளம்பரம் செய்வதும் சட்ட ரீதியான குற்றம் என்று ஆயுள்வேத வைத்திய சபை தெரிவித் துள்ளது.
எனவே ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு களை மேற்கொள்ளாதவர்கள் தரமற்ற மருந்து களை சமூக ஊடகங்கள் ஊடாகவோ அல்லது ஏனைய பகிரங்க ஊடகங்கள் வாயிலாகவே விளம்பரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் சபை வலியுறுத்தியுள்ளது. (ம-4)

## தாத்தாவாகினார் கோத்தாபய

கொழும்பு, மே 10
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மக னுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.
கோத்தபாய ராஜபக்சவின் மகன் மனோஜ் ராஜபக்ச அவரது மனைவி செவ்வந்தி ராஜ பக்ச இருவரும் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.
இவர்களுக்கு நேற்றுமுன்தினம் பெண் குழந்தை பிறந்துள்ளது.
தனது பேர்த்தியைப் பார்ப்பதற்கு ஜனாதி பதியின் மனைவி அமெரிக்காவுக்குப் புறப் பட்டுள்ளார். (ஒ.இ)

## பங்காளிகளை மீண்டும் சந்திக்கின்றார் மஹிந்த

கொழும்பு, மே 10
ஆளும் கட்சியின் பங்கா ளிக் கட்சித் தலைவர்களு டன் பிரதமர் மஹிந்த ராஜ பக்ச நாளை மாலை 6 மணிக்கு சந்திப்பு நடத்தவுள் ளார் என, அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.



ஆளும் கட்சித் தலைவர்களுடன் அண்மையில் சந்திப்பு நடைபெற்றிருந்தது. அந்தச் சந்திப்பில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ ஆகியோர் பங்கேற்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## தேயிலையின் தரத்துக்கு விதிமுறைகள்

கொழும்பு, மே 10
இலங்கைத் தேயிலையின் தரத்தை உறுதி செய் வதற்கான விசேட விதிமுறைகளை பெருந்தோட் டத்துறை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.
1957ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் சில விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொரு ளாக தேயிலையை வழங்கும் அனைத்து உற் பத்தியாளர்களுக்கும், பச்சைத் தேயிலை இலை களின் உரிமம் பெற்ற விற்பனையாளர்களுக்கும் இந்த விதிமுறைகள் பொருந்தும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக ஒவ்வொரு உற்பத்தியாளரும், தேயிலை இலைகளின் உரிமம் பெற்ற ஒவ் வொரு வியாபாரிகளும் குறைந்தபட்சம் 60 வீதம் பச்சைத் தேயிலை இலைகளைக் கொள் முதல் செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.
பச்சைத் தேயிலை இலைகளைச் சேதப்படுத்தா மல் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் கையாளுதல் உறுதி செய்யப்பட வேண் டும்.
உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் குறைந்தபட்சம் 60 வீதம் தரமான பச்சைத் தேயிலை கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடு களை உற்பத்தியாளர் கட்டாயமாக்க வேண்டும்.
சேதமடையாத பச்சைத் தேயிலையைத் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்கான முறையான வழிமுறையை ஆரம்பிக்க வேண்டும் என்று விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## அப்பிள் கைபேசிகள் திருட்டு: அறுவர் கைது

கொழும்பு, மே 10
பிரபல சர்வதேச பொதி சேவை நிறுவனம் ஒன்றினூடாக இலங் கைக்கு அனுப்பப்படும் 'அப்பிள்' கையடக்க தொலைபேசிகளை நீண்டகாலமாகத் திருடி விற்பனை செய்து வந்த 6 பேர் நீர்கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன் அவர்களால் மினு வாங்கொட, கண்டி மற்றும் திவுல பிட்டிய ஆகிய பிரதேசங்களில் விற்பனை செய்யப்பட்டிருந்த 25 லட்சம் ரூபா பெறுமதியான 16 அப்பிள் கையடக்கத் தொலை பேசிகளையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர். குறித்த சந்தேகந பர்களை நேற்றுமுன்தினம் நீர்கொ ழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்ப டுத்தியபோது அவர்களை விளக்கம றியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த கொள்கலன் கோரவிபத்து

### ஒருவர் சாவு ; நால்வர் படுகாயம்

கொழும்பு, மே 10
வேகக் கட்டுப்பாட்டையிழந்த கொள் கலன் வாகனம் ஒன்று, மேலும் சில வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் படுகாயமடைந்தனர்.
இந்த விபத்து அநுராதபுரம் - திரு கோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம மொரகந்த பிரதே சத்தில் நடந்துள்ளது.
அதிக வேகத்தில் பயணித்த கொள்கலன் வாகனம் கட்டுப்பாட் டையிழந்து, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மிதிவண் டி ஆகியவற்றை மோதித் தள்ளியது. பின்னர் வீதியில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றுடன் மோதி, அருகில் இருந்த பாதுகாப்புச் சுவர் மற்றும் மின் கம்பத்தில் மோதி நின்றது. விபத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
விபத்து தொடர்பில் நொச்சியா கம பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10 ஆண்டுகளாக

## மேய்ச்சல் தரவை இன்றி அம்பலப்பெருமாள்குளம்

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வீதிகளின் ஓரங்களில் மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர். 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 110 வரையான குடும்பங்கள் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் நம்பி வாழ்ந்து வருகின்றன.

அம்பலப்பெருமாள்குளத்தின் கீழ் தற்போது சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் அம்பலப்பெருமாள்குளத்தில் இருந்து அக்கராயன் செல்லும் வீதிகளிலும், கிராம அலுவலர் பிரிவின் காடுகளின் தொடக்கத்திலும் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவைக்கான இடங்களை அடையாளம் காட்டுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அக் கோரிக்கை நிறைவேற்றப்படாது காணப்படுகின்றது. வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவை தமது எல்லைகளை மக்களின் வாழ்விடங்களுக்கு அருகில் அடையாளப்படுத்தி இருப்பதன் காரணமாக மேய்ச்சல் தரவைக்கான நிலங்களை வழங்குவதில் உயரதிகாரிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-13)

## பிரித் ஓதும் நிகழ்வால் மாணவர்கள் கல்வி பாதிப்பு

*பெற்றோர் விசனம்*

சாவகச்சேரி, மே 10

கோவில்களில் உற்சவங்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் படைமுகாம்களில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை ஒலி பெருக்கி மூலம் பிரித் பாராயணம் நிழ்த்தப்படுவது குறித்து மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பரவி வரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட பௌத்த விகாரைகளிலும் படைமுகாம்களிலும் அண்மைக் காலமாக பிரித் ஓதும் நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன. ஒலிபெருக்கி மூலம். பிரித் பராயணம் ஓதுதல் இடம்பெறுவதால் மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு கல்வியை மேற்கொள்ள முடியவில்லை எனவும் படைமுகாம்களுக்கு அருகில் வதியும், குடும்பங்களில் உள்ள முதியவர்கள் ஒலிபெருக்கியின் சத்தத்தால் நித்திரையின்றித் தவிக்கின்றனர் எனவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-9)



## கசிப்பு உற்பத்திகள் தேடித் தேடி அழிப்பு

*சாந்தபுரம் இளைஞர்கள் முன்மாதிரி*


கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்குத் தயாரான நிலையில் இருந்த கசிப்பு அந்தப் பகுதி இளைஞர்களால் அழிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாந்தபுரம் கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தி, விற்பனையால் கிராமத்தில் அதிகளவு சமூகவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் சிலர் கடமையின் பொருட்டு சாந்தபுரம் கிராமத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்பவர்கள் அந்த அதிகாரிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து நடவடிக்கையில் இறங்கினர். இதன்போதே விற்பனைக்குத் தயாராக இருந்த கசிப்பு பைக்கற்றுக்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. (ப-214)



## தற்சார்ப்பு பொருளாதாரத்தை உயர்த்த வாழையிலையில் உணவு

*பிரதேச சபை உறுப்பினர் புதிய முயற்சி*

வவுனியா,மே 10

தற்சார்பு பொருளாதாரத்தைக் கருத்தில்கொண்டு உணவகங்களில் வாழை இலையில் உணவு வழங்குவது ஊக்குவிக்கப்படவுள்ளது என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் துஸ்யந்தன் விக்டர்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா உணவகங்களில் வாழை இலையில் உணவு வழங்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பில் அனைவரது கருத்துக்களின் பின்னர் உரிய சபைகள், மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து முயற்சி எடுப்பதற்கு எண்ணியுள்ளேன்.

இது உள்ளூர் விவசாயிகளின் தற்சார்பு பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய ஒரு திட்டமாகவும் அமையும். இதேவேளை ஒருவர் உணவு உட்கொண்ட தட்டில் இன்னொருவர் உணவு உட்கொள்ளும் நிலையும் மாறும். சில வேளைகளில் இதன் மூலம் இன்னொருவருக்கு நோய்த் தொற்றும் பரவாமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஒரு வாழை இலையின் விலை 5 ரூபாவாக இருந்தாலும் உணவுக் கட்டணத்தில் மேலதிகமாக பெற்றுக்கொள்வதில் பெரிய தவறேதும் கிடையாது. இதன் சாதக பாதக தன்மைகளைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் சபை அமர்வுகளில் இது தொடர்பான ஒரு பிரேரணை முன்வைக்க உள்ளேன் என்றார். (ப-110)

## மின்தடை

யாழ்ப்பாணம், மே

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** குருக்கள் புதுக்குளம் மணியர்குளம், நெளுங்குளம் நீர் வழங்கல் சபை அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக் கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம் நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல்தோட்டம் வீட்டுத் திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களில், மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய வீடமைப்புத் திட்டத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வீடு

*யாழ்.மாவட்டச் செயலகம் நடவடிக்கை*

மூளாய், மே 10

யாழ். மாவட்டத்தில் உள்ள கரையோரக் கிராமங்களில் வசிக்கும் மீனவக் குடும்பங்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகம் இந்தவிடயம் தொடர்பாக அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் ஏற்கனவே கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் ஊடாக இந்த நடவடிக்கையைத் தொடர்வதற்குரிய ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் புதிய திட்டத்தின்படி கரையோரப் பகுதிகளில் வசிக்கும் வீட்டு வசதிகள் அற்ற நிலையில் உள்ள குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களும் இந்த வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படுகின்றன. முதற்கட்டமாக இதற்கான பயனாளிகளை தெரிவுசெய்யும் நடவடிக்கைகள், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயனாளிகள் பட்டியல் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்தவுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ப-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கையர்கள் என்ன பரிசோதனை எலிகளா?

சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசி தொடர்பில் இன்னும் வாதப்பிரதிவாதங்கள் நீள்கின்ற நிலையில், அதைச் செலுத்துவதற்கான அனைத்து முகாந்திரங்களும் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள சீனர்களுக்கு ஏற்கனவே இந்தத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ள நிலையில் சீனர்களுக்கு மேலதிகமாக குறித்த தடுப்பூசியைப் பெறும் நபர்களாக இலங்கையர்கள் மாறவுள்ளனர்.

சைனோஃபார்ம் தடுப்பூசியை இலங்கையர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்ட போதிலும், எதிர்க்கட்சிகளதும், தன்னார்வ அமைப்புக்களதும் எதிர்ப்பையடுத்து அந்த நடவடிக்கைகள் தொங்குநிலையில் விடப்பட்டிருந்தன. 'உலக சுகாதார நிறுவனம் சைனோஃ பார்ம் தடுப்பூசிகளை அங்கீகரிக்கவில்லை' என்று தெரிவித்தே எதிர்க்கட்சிகள் இந்தத் தடுப்பூசிக்கு பெரும் எதிர்ப்பைப் பதிவுசெய்திருந்தன.

இத்தகையதொரு பின்னணியில் உலக சுகாதார நிறுவனம் சைனோஃ பார்ம் தடுப்பூசியை கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்று நேற்றுமுன்தினம் அனுமதித்துள்ளது. எனவே அந்தத் தடுப்பூசிக்கு வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பின் மூலகாரணம் தற்போது நீக்கப்பட்டுள்ள நிலையில், சைனோஃபார்ம் தடுப்பூசியை மக்களுக்குச் செலுத்தக்கூடிய ஏதுநிலை அரசுக்கு முழுவதுமாக ஏற்பட்டுள்ளது.

கொரோனா நாளுக்குநாள் இலங்கையில் கோரத்தாண்டவமாடி வருகின்றது. இறப்புக்களும் தற்போது மிகையாக அதிகரிக்க எத்தனிப்பது கண்முன்னே பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது. இந்த நிலையில் 'தடுப்பூசி' என்ற ஒன்றின் பிடிமானம் அல்லது தேவை என்பது தவிர்க்க முடியாதுதான். இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டு நிலையில் சைனோஃபார்ம் தடுப்பூசியை ஏற்றும் செயற்பாடுகளுக்கு அடுத்த சில தினங்களில் இலங்கையில் தீவிரமடைய வாய்ப்புக்கள் மிகைஅதிகம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியுடன் பல நாடுகளில் அதுவும் மேற்கத்திய நாடுகளில் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளால் ஏற்பட்ட பக்க விளைவுகள் காரணமாக பலர் உயிரிழந்தமையும் அதன் பின்னர் அந்த இறப்புக்களுடன் தொடர்புடைய தடுப்பூசிகளின் பாவனை நிறுத்தப்பட்டு மீள்பரிசீலனைக்கு அவை உட்படுத்தப்பட்டு வருகின்றமையும் கண்கூடு. ஆக, 'பரிசோதனை எலிகள்' என்ற மட்டத்தில்தான் இலங்கையர்களான நாம் சைனோஃ பார்ம் விடயத்தில் உள்ளோம் என்பதை மறுப்பதற்கில்லை.

அதேநேரம்இலங்கைக்குஅனுப்பப்பட்டிருக்கும்சைனோஃ பார்ம் தடுப்பூசிகள் பில்லியன் டொலர் பெறுமதியுடைய மிகப்பெரிய வர்த்தகத்தை சீனாவுக்கு ஆரம்பித்துக் கொடுக்கவல்லன என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்தத் தடுப்பூசிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் உலக நாடுகளின் ஒப்பந்தத்தை சீனா பெற்றுக்கொள்ளும்.

இலங்கையர்களுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசிகளில் ஓரளவு வெற்றிபெற்றுள்ள வகையாக அஸ்ராஜெனகா தடுப்பூசிகளைக் குறிப்பிடலாம். ஆனால் அஸ்ரா ஜெனகாவின் முதல் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸைச் செலுத்துவதற்கே 6 லட்சம் டோஸ் வரையில் பற்றாக்குறை உள்ள நிலையில் அதற்கு மேலதிகமாக இந்தத் தடுப்பூசியை எங்கிருந்து கொண்டுவருவது என்ற கேள்வியும் இருக்கத்தான் செய்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் அரசு ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இது சீனாவுக்கு விசுவாசம் காட்ட வேண்டிய விடயம் அல்ல. நிலவரம் பாரதூரமானது. பேராபத்தில் நாம் உள்ளோம். கொரோனாவுக்குப் பயந்து தடுப்பூசிகளைப் பெறுவதற்கு முனைந்து தடுப்பூசிகளால் உயிர்கள் பறிபோன பேரவலம் இடம்பெற்றுவிடக்கூடாது. துல்லியமான விஞ்ஞானத் தரவுகளுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் இந்த விடயத்தை அரசு அணுக வேண்டும். எதிர்கட்சிகளதும் சுகாதாரத் துறையினரதும் கழுகுப்பார்வை இந்த விவகாரத்தில் இன்னும் கூர்மை பெறட்டும்.





# இரவு நேரங்களில் வந்து நாசம் செய்யும் யானை

## புத்துவெட்டுவான் விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி, மே 10**

**கிளிநொச்சி புத்துவெட்டுவான் கிராமத்தில் ஒரு வருடத்துக்கும் மேலாக தனியன் யானையொன்று கிராமத்துக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்துவருகின்றது என்று புத்துவெட்டுவான் கிராம விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், குறித்த தனியன் யானை மாலை ஆறுமணிக்குப் பிறகு கிராமத்துக்குள் வருகின்றது. பயிரிடப்பட்டிருக்கும் மரவெள்ளி, பூசணி மற்றும் பயற்றை போன்ற விவசாய உற்பத்திகளையும் முற்றாக அழிப்பதுடன் ஐந்து வருடங்கள் வரை பாடுபட்டு வளர்த்த



தென்னைகளையும் அது விட்டுவைக்கவில்லை. யானை கிராமத்துக்குள் வருவதைக் கட்டுப்படுத்துவதற்காக மின்வேலி அமைத்துத் தருமாறு துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் கிராமத்தின் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ள போதும் சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை - என்றனர். (ம-த.12)

# கசிப்புடன் கைதான இருவருக்கும் பிணை

தருமபுரம், மே 10

தருமபுரம் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் உழவனூர் மற்றும் குமாரசாமிபுரம் பகுதிகளில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 89 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கசிப்பு காய்ச்சினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (த-316)

# பிரதேச செயலக தொற்றாளரான கர்ப்பிணி கிளிநொச்சிக்கு

சாவகச்சேரி மே. 10

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் எட்டு மாதக் கர்ப்பிணிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பிரதேச செயலக அலுவலருக்கு கடந்த வாரம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பிரதேச செயலக திட்டமிடல் அலகு மூடப்பட்டு அங்கு பணியாற்றுவோர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, இரு பெண் அலுவலர்கள் உட்பட மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்று உறுதிசெய்யப்பட்ட பெண் அலுவலர்களில் ஒருவர் கர்ப்பிணி என்பதால் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அன்றையதினம், வெளியிடப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்ட 18 பேரில் ஏனைய 17 பேரும் கோப்பாய் சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்படும்

## சாவ.நகரசபை உபதவிசாளர் எச்சரிக்கை

**கொடிகாமம், மே 10**

**சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சந்தை வர்த்தகர்கள் கொரோனா நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுகின்ற பட்சத்தில் அவர்களின் வர்த்தக நிலையங்கள் உடனடியாக 7 நாள்களுக்கு மூடப்படும் என நகராட்சி மன்றின் உபதவிசாளரும், சந்தைக் குழுத் தலைவருமான அ.பாலமயூரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தென்மராட்சியில் கொரோனாத் தொற்றுப் பரவல் வேகமெடுத்ததைத் தொடர்ந்து சாவகச்சேரி நகராட்சி மன்றம் பல்வேறு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்குவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொடிகாமம் பொதுச் சந்தையில் கொரோனாத் தொற்று பரவியதால் நகரமே முடக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிலைமை எமது சாவகச்சேரி நகர சந்தைக்கு ஏற்படாமல் இருக்க நாம் முன்னேற்பாடான சுகாதார நடைமுறைகளைச் செயற்படுத்தியுள்ளோம்.

முகக்கவசம் அணியாமல் எவரும் சந்தை வளாகத்துக்குள் நுழைய முடியாது. வர்த்தக நிலையங்களில் அளவுக்கதிகமான வாடிக்கையாளர்களை அனுமதிக்க முடியாது. ஏலம் கூறுகின்ற பகுதிகளில் கொள்வனவு செய்வோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

மேலும் வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்கின்ற வாடிக்கையாளர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாவிட்டாலும் வர்த்தக நிலையம் 7 நாள்களுக்கு இழுத்துமூடப்படும்.

இன்று முதல் சாவகச்சேரி சந்தை வளாகத்தில் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது தயவுதட்சணமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ப-159)

## தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகளுக்கு தொற்றில்லை

சாவகச்சேரி, மே 10

தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளின் ஒரு தொகுதி முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், செயலக உத்தியோகத்தர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளையில் பணியாற்றும் வெளிக்கள அலுவலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதன்பின்னர் கொடிகாமம் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் ஒரு அலுவலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்றுக்குள்ளானவர்கள் பணியாற்றும் அலகில் பணியாற்றுபவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கர்ப்பிணியான அலுவலர் ஒருவர் உட்பட 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதையடுத்து பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் கடந்த வியாழக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டன. பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரிடமும் மாதிரிகள் எடுக்கப்பட்டன.

அவை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் காலை அவற்றின் ஒரு தொகுதி முடிவுகள் வெளியாகின. இம்முடிவுகளின் படி பிரதேச செயலக உயர் அதிகாரிகளுக்குத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## சாவ. பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர்.

சாவகச்சேரி, மே 10

சாவகச்சேரி பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொடிகாமம் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் 389 பேருக்கு கடந்த ஏப்ரல் 28, 30 மற்றும் மே 2 ஆகிய திகதிகளில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களில் 43 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. குறித்த உறுப்பினர் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் கலந்துகொண்டிருந்தார்.

ஆய்வுப் பெறுபேற்றுப் பட்டியலில் உறுப்பினருக்கு தொற்று உறுதிப்படுத்ததையடுத்து சபை அமர்வில் பங்குபற்றிய சபை உறுப்பினர்கள் அனைவரையும் சுயதனிமையில் இருக்குமாறு அறிவித்த தவிசாளர், சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமென சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கேட்டிருந்தார். இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் அலுவலர்களுக்கும் நேற்று உறுப்பினர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ப-9)

## தொற்று அதிகரிக்க வாய்ப்பு; 14 நாள்கள் வீடுகளில் இருங்கள்

### சாவ.சுகாதார மருத்துவ அதிகாரி அறிவிப்பு

சாவகச்சேரி, மே 10

கொடிகாமம் கொத்தணியுடன் தொடர்புபட்டு கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் பல பிரதேசங்களிலும் உள்ளவர்கள் 14 நாள்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறாமல் இருக்கவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் பலர் தொற்றுக்கு இலக்காகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் வெளியில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து வீடுகளில் இருக்கவேண்டும். கொடிகாமம் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்தவர்களே தற்போது தொற்றுக்கு இலக்காகி வருவதால் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களுடன், தொடர்புடைய பொதுமக்கள் பலர் கிராமப்புறங்களில் உள்ளனர். இவர்களுக்கு தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. இதனால் மக்கள் 14 நாள்கள் தமது வீடுகளில் இருக்கவேண்டும். கொரோனா தொடர்பான அறிகுறிகள் காணப்படின் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் 021 2270014 என்ற இலக்கத் தொலைபேசியில் அல்லது எமது பிரிவு பொதுச் சுகாதார பரிசோதருடன் தொடர்பு கொள்ளவேண்டும். தொற்று அறிகுறிகளுடன் மருத்துவமனைக்குச் செல்வோர் அங்குள்ள ஏனைய நோயாளர்களுக்கு அருகில் செல்லாமல் குறிப்பிட்ட தூரத்தில் நின்று மருத்துவமனைப் பணியாளரை அழைத்து சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ப-9)

## தமிழக முதலமைச்சருக்கு தமிழ்த் தேசியக் கட்சி வாழ்த்து

யாழ்ப்பாணம், மே 10

தமிழ் நாட்டின் முதலமைச்சராக மிக நெருக்கடியான சூழ்நிலையில் பொறுப்பேற்றிருக்கும் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

எதிர்நிற்கும் பெரும் சவால்கள் அனைத்தையும் வெற்றிகரமாக சந்தித்து இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு எழுச்சி பெறும் புதியதோர் பொற்காலத்தை தங்களின் ஆட்சிக் காலத்தில் விரைந்து உருவாக்கிட வாழ்த்துக்கள்.

முடிவின்றித் தொடரும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நீதி நிலை நாட்டப்படுவதில் தமிழ் நாட்டின் முதல்வர் என்ற அடிப்படையில் தங்களின் காத்திரமான பங்களிப்பை எமது மக்கள் உரிமையுடன் எதிர்பார்த்து நிற்கின்றார்கள். - என்று குறிப்பிட்டுள்ளார். (த-26)



## உடையார் கட்டில் சிவலிங்கம் பிரதிஷ்டை

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு கிராமத்தில் அமைந்துள்ள விவசாய பண்ணையில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ் டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

உருத்திரசேனை அமைப்பால் உடையார்கட்டுப் பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான விவசாய பண்ணையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ஜ-19)

## அதிகரிக்கும் யானைத்தொல்லை

வவுனியா,மே 10

அதிகரித்து வரும் காட்டு யானைகளின் தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்படுகிறோம். இது தொடர்பில் அதிகாரிகள் அசண்டையீனமாக உள்ளனர் என்று யானைகளின் தொல்லையால் பாதிக்கப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



வவுனியா, ஓமந்தை-பன்றிக்கெய்தகுளம் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த யானைகள் பயன்தரும் மரங்களை சேதப்படுத்தின. தமது வாழ்வாதாரமாக விவசாயம் மற்றும் தோட்டச்செய்கையில் ஈடுபட்டு வரும் மக்களுடைய பயன் தரு மரங்களையே யானைகள் சேதப்படுத்தியுள்ளன. இவ்வாறான நிலையிலேலே மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். "கடந்த மூன்று வருடங்களாக காட்டு யானைகளின் தாக்குதலால் எமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யானை வேலி அமைத்துத்தருமாறு பலமுறை அதிகாரிகளுக்கு கோரிக்கை முன்வைத்தும் இன்றுவரை யானை வேலி அமைக்கப் படவில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** நிதி விடயங்களில் இருந்த சிக்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். உறவினர் நட்புக்கரம் நீட்டுவர். மனதில் இருந்த குழப்பங்கள் தீரும். எதிர்பாலினத்தவரால் நன்மை உண்டு.

**இடபம்:** முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் அனைத்தும் நிம்மதியளிக்கும். பணி பற்றிய விடயங்கள் திட்டமிட்டதைவிடவும் தாமதமாகும்.

**மிதுனம்:** பழைய பகை ஒன்றைப் பேசித் தீர்த்துக்கொள்வீர்கள். நம்பிக்கை அதிகரித்து நிம்மதி பிறக்கும். தேவை நிறைவேறும். கவலையற்ற நாள். புதிய நபரிடமிருந்து நற்செய்தி வரும்.

**கடகம்:** பொறுப்புடன் பேச வேண்டும். பலகாலத் திட்டம் நிறைவேறும். கூடுதல் உழைப்பு தேவைப்படும் நாள். மனம் நிறையும். மனைவியின் உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**சிம்மம்:** மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறுவீர்கள். பொழுது போக்கு உண்டு. கலகலப்பான நாள். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**கன்னி:** சொல்லிலும் செயலிலும் கவனம் தேவை. மகிழ்ச்சி கூடும். பெருமிதம் கிட்டும். பிள்ளைகளின் சாதனை மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத்துணையின் சிரமங்களைக் குறைப்பீர்கள்..

**துலாம்:** பயம் ஏற்பட்டு விலகும். தவறு செய்யாமல் இருங்கள். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்க்கவும். விரைவில் சுபச்செலவுகள் ஏற்படுவதற்கான அறிகுறி தெரியும்.

**விருச்சிகம்:** பணியாளர்களின் பேச்சால் அலுவலகத்துக்கு நன்மை விளையும். பிள்ளைகள் பற்றி உங்களுக்கிருந்த கவலைகள் நீங்கும். நிதி நிலைமை பற்றிய பிரச்சினை தீரும். நட்பு வட்டம் விரியும்.

**தனுசு:** சிறு கவலை ஏற்பட்டு உடனே விலகும். கலை ஆர்வம் வரும். கடனை அடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். பிரச்சினையிலிருந்து மீளுவீர்கள். புதிய துறையில் ஆர்வம் வரும்.

**மகரம்:** சிரமப்படும் ஒருவருக்கு உதவிகள் செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினரின் நடவடிக்கை காரணமாக கவலை ஏற்படக்கூடும். உங்களின் பணிகளை நேர்த்தியாக செய்து முடித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** சிறு கவலை ஏற்பட்டு உடனே விலகும். கலை ஆர்வம் வரும். கடனை அடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். பிரச்னையிலிருந்து மீளுவீர்கள். புதிய துறையில் ஆர்வம் வரும்.

**மீனம்:** :முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு உண்டு. வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நாள். வரவு திருப்தி தரும். அலைச்சல் ஏற்படும். உழைப்பிற்கேற்ற நல்ல பலன் கிடைக்கும்..

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 1 | | | | | 3 |
| 1 | 4 | | 2 | 6 | | | | |
| | | | 5 | 7 | | | | |
| | | | | | 7 | | 1 | 2 |
| 9 | 1 | | | | | | 4 | 7 |
| 7 | 3 | | 8 | | | | | |
| | | | | 1 | 6 | | | |
| | | | | 9 | 2 | | 6 | 4 |
| 3 | | | | | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 8 | 4 | 9 | 3 | 5 | 2 |
| 5 | 2 | 4 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 3 | 8 | 9 | 6 | 5 | 2 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 2 | 7 | 8 | 6 | 5 | 3 | 4 |
| 8 | 7 | 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 3 | 1 | 8 | 2 | 7 |
| 9 | 5 | 1 | 4 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 2 | 3 | 8 | 1 | 6 | 5 | 4 | 7 | 9 |
| 7 | 4 | 6 | 2 | 9 | 3 | 1 | 8 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.








## 'அடங்காதே' இயக்குநரின் புதிய படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ்

'அடங்காதே' படத்தின் இயக்குநர் சண்முகம் முத்துசுவாமி இயக்கவுள்ள புதிய படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கவுள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் எல்லாம் குறைந்து திரையரங்குகள் திறக்கப்பட்டவுடன் 'அடங்காதே' படம் வெளியாகவுள்ளது. தற்போது தனது அடுத்த படத்தின் பணிகளைத் தொடங்கிவிட்டார் சண்முகம் முத்துசுவாமி. நாயகியைப் பிரதானமாகக் கொண்ட இந்தக் கதையில் ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கவுள்ளார்.

தற்போது இந்தப் படத்துக்கான ஏனைய நடிகர், நடிகைகள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது. கொரோனா அச்சுறுத்தல் குறைந்தவுடன் படப்பிடிப்பு தொடங்கும் எனத் தெரியவருகிறது.




## டோனியை இலகுவில் எரிச்சலூட்டுவேன் கிரிக்கெட் அவருடைய அன்புக் குழந்தை

## மனம் திறக்கிறார் சாக்ஷி



பிரபல கிரிக்கெட் வீரரான டோனியை மைதானத்தில் அவ்வளவு இலகுவில் ஆக்ரோசமாகப் பார்க்க முடியாது.

'கப்டன் கூல்' என்ற செல்லப்பெயர்கூட டோனிக்கு உண்டு. பதற்றம் இல்லாமல் ஆக்ரோசப்படாமல் நிலைமைகளைக் கையாள்வதால் அவருக்கு இந்தச் செல்லப்பெயர் கொடுக்கப்பட்டது. டோனியைப் பற்றிய பொதுவான புரிதல் இவ்வாறிருக்க, 'டோனியை என்னால் எரிச்சல்படுத்த முடியும்' என்று தெரிவித்துள்ளார் அவரின் மனைவியான சாக்ஷி. டோனி தொடர்பில் சாக்ஷி தெரிவிக்கையில்:



டோனியை என்னைத் தவிர யாராலும் எரிச்சல் படுத்திவிட முடியாது. என்ன நடந்தாலும் அவர் அமைதியாகவே இருப்பார். ஆனால், நான் நினைத்தால் அவரை எளிதில் தூண்டிவிட்டு எரிச்சல்படுத்திவிடுவேன். வீட்டில் நாங்கள் எப்போதும் கிரிக்கெட் பற்றி பேசியதே கிடையாது. சராசரிப் பெண் தன் கணவரிடம் அலுவலகத்தில் என்ன நடந்தது என்று கேட்பது போல் அவருடைய தொழில்பற்றி நான் ஒருபோதும் விசாரித்தது இல்லை. அவருக்கு கிரிக்கெட் மீது காதல் அதிகம். அது அவருக்கு ஓர் அன்புக் குழந்தை. அந்த குழந்தை பற்றி நான் எப்போதும் பேசவே மாட்டேன்.

அதேபோல், எங்கள் மகள் ஷீவா தந்தை சொல் மட்டுமே கேட்பாள். அவளைச் சாப்பிட வைக்க நானும் எனது மாமியாரும் போராட வேண்டும். ஆனால் டோனி ஒருமுறை சொன்னால் போதும் உடனே கேட்டுக்கொண்டு நடப்பாள். நல்லவேளையாக நான் டோனியை, கலர் செய்யப்பட்ட நீளமான சிகை அலங்காரத்துடன் பார்க்கவில்லை. அவரை அந்தத் தோற்றத்தில் சந்திக்க நேர்ந்திருந்தால் நிச்சயமாக அவரை பார்த்திருக்கவே மாட்டேன். அழகியலும் முக்கியம் தானே. - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



மண்ணில் 17 - 11 - 1939

விண்ணில் 03 - 05 - 2021

**திருமதி. சிவபாக்கியம் இராசகோபாலபிள்ளை**

(இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி நாவற்குளியை பிறப்பிடமாகவும், இல.N-4, அரச தொடர்மாடி கட்டடம் (Bambalapitya Govt. Flats), பம்பலப்பிட்டி, கொழும்பு என்ற இடத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சிவபாக்கியம் இராசகோபாலபிள்ளை அவர்கள் கடந்த (03.05.2021) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துத்தம்பி (சின்னராசா) மற்றும் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு.இராசகோபாலபிள்ளை (இளைப்பாறிய வெளிவிவகார சேவை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், கலாநிதி. இ. இராயுகன் Phd (மென்பொருள் பொறியியல் - அவுஸ்ரேலியா) அவர்களது பாசமிகு தாயாரும், கார்த்தியாயனியின் அன்பு மாமியும், மிரித்துயனின் பாசமிகு அப்பம்மாவும், திரு.கனகசபாபதி, திரு. சாம்பசிவம், அமரர் சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் கண்மணி, சரஸ்வதி, அமரர் விசாலாட்சி, வீரசிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அண்ணியாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் 05.05.2021 புதன்கிழமை அன்று ஜெயரட்ண மலர்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைபேசி : 077 323 6041

திரு. மு. இராசகோபாலபிள்ளை (கணவர்),
கலாநிதி. இ. இராயுகன் (மகன்).


# தனியார் சுகாதார துறையினரும் தடுப்பூசி இறக்குமதி செய்யலாம்

## அரசுக்கு ஆட்சேபனையில்லை

**கொழும்பு, மே 10**
**இலங்கைக்குள் தனியார் துறையினரும் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய முடியும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.**

தடுப்பூசி உற்பத்தியாளர்களால் அனுமதிக்கப்பட்ட தனியார் துறை சுகாதார நிறுவனங்கள், தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான முன்மொழிவுகளை வழங்கினால் இலங்கை அரசு அதனை ஆட்சேபிக்காது என்று தடுப்பூசிக்கான ஆலோசனை வழங்கும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை இதுவரை எந்தவொரு தனியார் சுகாதாரத்துறை நிறுவனங்களும் அத்தகைய முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை என்பதையும் குறிப்பிட்டார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சபை தற்போது அனுமதியளித்துள்ள தடுப்பூசிகள் அனைத்தும் அவசர பயன்பாட்டுக்கானவை. இதன் காரணமாக தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்கள் நேரடியாக அரசுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. மேலும் தடுப்பூசி ஏற்றப்பட்ட ஒருவருக்கு ஏதாவது நடந்தால் அதற்கு அரசுதான் பதிலளிக்கின்றது என்றும் வீரதுங்க குறிப்பிட்டார். (ஒ,5)

## தொற்றுநீக்கி அன்பளிப்பு



கொடிகாமம், மே 10
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரின் பயன்பாட்டுக்காக ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் தொற்று நீக்கிகள் கடந்த வெள்ளிக்கிழமை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் நிருவாகதினரால் இவை வழங்கப்பட்டுள்ளன. (த-159)



## முதலாவது தடுப்பூசிக்கு பல நாடுகளுடன் பேச்சு

கொழும்பு, மே 10
கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக, இலங்கை முதலாவதாகப் பெற்றுக்கொண்ட அஸ்ராஜெனகா தடுப்பூசியை, ஏனைய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அஸ்ராஜெனகா தடுப்பூசி மீண்டும் இந்தியாவிடமிருந்து கிடைப்பது சாத்தியமற்றுள்ள நிலையில், ஏனைய நாடுகளிடமிருந்து அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே இதனை உறுதிசெய்துள்ளார்.

அஸ்ராஜெனகா தடுப்பூசி மேலதிகமாக உள்ள தென்கொரியா, அமெரிக்கா மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளில் உள்ள முகவர்களுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைச் செலுத்துவதற்கு, இலங்கைக்கு 6 லட்சம் அஸ்ராஜெனகா தடுப்பூசி அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



## 5.8 மில்லியன் பைசர் தடுப்பூசிகள் கொள்வனவு

கொழும்பு, மே 10
இலங்கை அரசு 5.8 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை கொள்ளவனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

பைசர் தடுப்பூசிகளுக்கு இலங்கையின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சபை அனுமதி வழங்கியது.

இதனடிப்படையில் பைசர் தடுப்பூசி உற்பத்தியாளர்களுக்கும் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் இன்றைய தினம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. ஒரு தடுப்பூசியின் பெறுமதி 6.75 அமெரிக்க டொலர்.

முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டு 21 நாள்களின் பின்னர் இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்படவேண்டும்.

35 ஆயிரம் தடுப்பூசிகள் முதல் கட்டமாக ஜூன் மாதம் கொள்வனவு செய்யப்படும். அதன் பின்னர் செப்ரெம்பர் மாதத்துக்கு இடையில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படும். டிசெம்பர் மாதத்துக்கு இடையில் 4.5 மில்லியன் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## தடுப்பூசி போடாவிட்டால் அடுத்த வாரம் புறக்கணிப்பு

*தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு*

கொழும்பு, மே 10
தனியார் பேருந்து ஊழியர்களுக்கும் உரிமையாளர்களும் இந்த வாரம் முடிவடைவதற்கு முன்னர் கொரோனாத் தடுப்பூசி செலுத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் அடுத்த வாரத்திலிருந்து நாம் சேவையில் ஈடுபடமாட்டோம். இவ்வாறு தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

'கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படுதல் தொடர்பில் பல கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்தும் எதுவும் நடைபெறவில்லை.

தனியார் பேருந்துப் பணியாளர்களுக்கும் கொரோனாத் தொற்று இலகுவில் ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

சுகாதார மற்றும் முன்களப் பணியாளர்கள் போன்று அவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படவேண்டும். தனியார் பேருந்து சேவையில் 45 ஆயிரம்பேர் உள்ளனர்' என்றார் கெமுனு விஜயரத்ன. (ஒ,இ)

# சீன விண்கலத்தின் விலகிய பாகம் மாலைதீவு அருகே கடலில் வீழ்ந்தது


கொழும்பு, மே 10
விண்வெளியில் கட்டுப்பாட்டை இழந்த சீனாவின் விண்கலத்தின் பெரும் பாகம் இந்து சமுத்திரத்தில் மாலைதீவுகள் அருகே கடலில் வீழ்ந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாகங்கள் எரிந்த நிலையிலேயே கடலில் வீழ்ந்தது என்பதை சீன அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த விண்கலத்தின் பெரிய அந்தப் பாகம் நியூசிலாந்து, இந்தோனேசியா அல்லது மேற்கு ஐரோப்பா போன்ற ஏதேனும் ஒரு பகுதியில் விழலாம் என்று கடந்த சில தினங்களாக எதிர்பார்க்கப்பட்டது. விண்கலப்பாகம் பூமியில் வீழ்வதற்கு முன்னரே அதனை சுட்டு வீழ்த்துவது உட்பட பல வழிமுறைகள் கைவசம் உள்ளபோதிலும் அவ்வாறு செய்யத் தீர்மானிக்கப்படவில்லை என்று அமெரிக்காவின் பென்ரகன் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

பூமியில் சுமார் 70 வீதம் கடற்பகுதி என்பதால் அது பெரும்பாலும் கடலில் வீழ்வதற்கே வாய்ப்புகள் அதிகம் என்று விண்வெளி அறிவியலாளர்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும்



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங்

நேர்காணல் பொ.சோபிகா

**கே: நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள காரணத்தால் பொதுமக்கள் ஒன்றுகூடல் நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளன?**

ப: முள்ளிவாய்க்காலில் மரணித்த அல்லது கொல்லப்பட்ட எமது உறவுகளின் 12ஆம் ஆண்டு நினைவு தினம் இந்த வருடம் மே 18ஆம் நாள் தமிழ்த் தேசிய துக்க தினமாக நினைவு கூரப்படவுள்ளது. கடந்த ஆண்டைப்போல பெருந்தொற்றுத் தாக்கத்துக்கு மத்தியில்தான் இந்த ஆண்டும் நினைவேந்தலை நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சட்டத்துக்கு உட்பட்ட வகையில் நிகழ்வுகள் நிச்சயம் இடம்பெறும். அன்றைய நாளில் காலை 10 மணிக்கு நாம் விளக்கேற்றி மௌன அஞ்சலி, மற்றும் மலர் அஞ்சலிகளுடன் நினைவேந்தலை ஆரம்பிப்போம். மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அதற்கு ஏற்ற முறையில் பங்கெடுக்குமாறு கேட்டுநிற்கிறோம். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலிக்கவிடப்பட்டு அதைத் தொடர்ந்து, பொது இடங்களிலும், வீடுகளிலும் விளக்கேற்றி மௌன அஞ்சலி செலுத்தி நினைவேந்தலை நிகழ்த்துமாறு மக்களைக் கேட்டுள்ளோம்.

**கே: முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை கடந்த வருடங்களில் நடத்தும்போது, சில பொது அமைப்புக்கள் மற்றும் சில கட்சிகளால் அப்பகுதியில் பல்வேறு குழப்பநிலைகள் ஏற் பட்டன. அதற்கான காரணம் என்ன? இம்முறையும் அவ்வாறான குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளனவா?**

ப: கடந்த காலங்களிலே இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலிப்பு நிகழ்வுகளை முன்னெடுப்பதில் ஒருசில குழப்பங்கள் இடம்பெற்று வந்துள்ளன. கடந்த இரு ஆண்டுகள் நாங்கள் முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியதன் பின்னர் இரு ஆண்டுகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் சுமூகமாக நடைபெற்றுள்ளன. இந்த வருடமும் ஒரு பொதுக்கட்டமைப்பு ஊடாகவே நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும். இந்த பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அனைத்து சமூகத் தரப்பினரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இனியும் வழங்குவார்கள்.

**கே: முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு எவ்வாறு உருவாகியது? அதில் யார் யார் எல்லாம் அங்கம் வகிக்கின்றார்கள்? வடக்கு கிழக்கு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் அதில் உள்வாங்கப்பட்டுள்ளார்களா?**

ப: 2019ஆம் ஆண்டு ஒரு சில தொடர் சந்திப்புக்களின் பின்னணியில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. வடக்கு கிழக்கின் ஒவ்வாரு மாவட்டத்திலும் இருந்து அரசியலில் நேரடியாக ஈடுபடுபவர்கள் தவிர்த்து தலா இரண்டு பேரை கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் வழியாகத்தான் இந்த நிகழ்வுகள் கடந்த இரு ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்படுகிற இந்த கட்டமைப்பு உருவாகிய சில காலத்தின் பின்னர் 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. 2020ஆம் ஆண்டு கொரோனாத் தாக்கம் ஏற்பட்டது. இந்த நெருக்கடிக்குள்தான் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இம்முறையும் அதேபோன்றதொரு நெருக்கடியில் நாம் உள்ளோம்.

**கே: முள்ளிவாய்க்கால் நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என கடந்த மாகாணசபை அமர்வுகளில் தீர்மானம் எடுக்கப்பட்டது, அதுபோல தமிழ்த் தேசியக் கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல அரசியல்வாதிகளும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் இதுவரை அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றதுபோல் தெரியவில்லை. இந்தத் தாமதத்துக்கான காரணம் என்ன?**

ப: முள்ளிவாய்க்கால் நினைவு ஆலயம் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்குள் மாகாணசபை காலம் முடிவுற்றுள்ளது. பலரும் இதில் ஆர்வம் கொண்டுள்ளார்கள். இதற்கான பூர்வாங்க செயற்பாடுகளை நாம் விரைவிலே முன்னெடுக்கவேண்டிய தேவை உள்ளது. பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலே நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**கே: கடந்த காலங்களில் பல்வேறு துக்க தினங்களைக் கடைப்பிடிப்பதற்காக வீடுகளில் கறுப்பு கொடிகள் பறக்கவிடுமாறு அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து அறிவித்தபோதும் பொதுமக்கள் அவற்றை பெரியளவில் கடைப்பிடிக்கவில்லை. அதற்கான காரணம் என்னவென நீங்கள் நினைக்கிறீர்கள்?. இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தன்றும் அவ்வாறான அழைப்பை விடுத்துள்ளீர்கள். சாத்தியமாகுமா?**

ப: பல்வேறு விதமான துக்க தினங்கள் நினைவுகூருவதற்கான தேவை இருக்கிறது. இருந்தாலும் வீடுகளிலே விளக்கு ஏற்றுதல் கறுப்புக்கொடி கட்டுதல் என்பது அதிகமாக பயனளிக்கவில்லை. இன்னும் இது மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்னும் பெரும் குறை உள்ளது. முடிந்தவகையில் இதற்கான முயற்சிகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். இதில் கூடிய கவனம் எடுத்துள்ளோம். பலரின் ஒத்துழைப்புடன் இதை மக்கள் மயப்படுத்தி நிறைவேற்ற முயற்சி எடுக்கிறோம்.

**கே: பொதுக்கட்டமைப்பினரின் அறிக்கையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு நீதி சேகரிப்பதைத் தவிர்க்குமாறு அறிவித்துள்ளீர்கள். கடந்த வருடங்களில் இவ்வாறு நீதி சேகரிப்பு மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா?**

ப: மோசடிகள் இடம்பெற்றதற்கான போதிய ஆதாரங்கள் எம்மிடம் இல்லை என்பதற்கு அப்பால் இதனைப் பயன்படுத்தி துஷ்பிரயோகங்கள் நடக்க கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். யாராவது இதைப் பயன்படுத்தி நிதி சேகரிப்பது என்பது புனிதமான போராட்டதை மழுங்கடித்துவிடலாம் என்பதற்காகத்தான் இந்தத் தினத்தை முன்னிட்டு நிதி சேர்க்க வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

**கே: முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு சார்பாக, பொது மக்களுக்கு நீங்கள் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை கடைப்பிடிப்பது தொடர்பாக கூற நினைப்பது?**

ப: எந்தவொரு நிகழ்வும் எந்தவொரு போராட்டமும் எந்தவொரு நினைவுகூருதலும் மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்றால் அது வெற்றியளிக்கப் போவதில்லை. எனவே உணர்வாளர்கள் ஒவ்வாருவரினதும் பங்களிப்பில்தான் நினைவேந்தல் நிகழ்வு என்பது வெற்றியளிக்க முடியும் என நாம் கருதுகிறோம். தமிழ் பேசும் தமிழ் உணர்வுள்ள அனைவரும் இந்த நிகழ்வில் இணைந்து கொள்ளுமாறு தோழமையுடன் கேட்டு நிற்கிறோம். இது எமது எதிர்கால சந்ததியினர், இளையோர் சிறுவர்கள் இந்த நிகழ்வுகளில் உணர்வு ரீதியாக பங்கெடுக்க நிச்சயமாக ஒவ்வொரு இல்லங்களிலும் நினைவுகூரல் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுநிற்கிறோம். ஒவ்வொரு இனமும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை நினைவுகூருவது அவசியமானது. எமக்கு ஏற்பட்ட ஒவ்வொரு அழிவுகளையும் எமது பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுப்பது அவசியமானது. ஏனென்றால் நாம் எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து நிற்கவும் எதிர்காலத்தில் ஒரு சமத்துவமுள்ள மக்களாக வளர்ந்து வரவும் இந்த செயற்பாடுகள் மிக அவசியமானதாக உள்ளன. இந்த வேளையில் நாம் மக்களிடம் கேட்பது மே 18 அன்று மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மணி ஒலிக்க விடப்படும்போது பொது இடங்களிலும் வீடுகளிலும் முடிந்தால் ஒவ்வொரு சந்திகளிலும் விளக்கு ஏற்றி மௌன அஞ்சலிகளை நிறைவேற்றுங்கள். பொதுக்கட்டமைப்பின் வழியாக தமிழ் தேசியத்தின் துக்க தினத்தில் உணர்வு ரீதியாக பங்கெடுக்க அனைத்து சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், வர்த்தகர்கள் இளைஞர்கள், விளையாட்டு கழகங்கள் இதற்கான ஒத்துழைப்பை வழங்கி துக்க தின நிகழ்வை கடைப்பிடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி பொதுச் சந்தை திறப்பு விழா நேரலையில்!

யாழ்ப்பாணம், மே 10

அச்சுவேலி பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான பொதுச்சந்தைக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு இணைய நேரலை ஊடாக நடைபெறும் என்று வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளார் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பிரதேச சபையின் 10 மில்லியன் ரூபா செலவில் கடந்த வருடம் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டிருந்தது.

தற்போதைய சுகாதார நிலைமைகளைக் கருத்தில்கொண்டு எவரும் நேரில் அழைக்கப்படாது நிகழ்வு இணைய வழி ஊடாக நடத்தப்படுகின்றது.

சந்தைத் திறப்பு விழா நேரலையில் பிரதேச சபையின் முகப்புத்தகம் மற்றும் ஏனைய இணையவழி முறைமைகளின் ஊடாக நடைபெறும். அரசியல் தலைமைகள், பிரதேச சபையின் உறுப்பினர்கள், அதிகாரிகள், சிவில் அமைப்புகள், சனசமூகநிலையங்கள், சந்தை வியாபாரிகள், பிரதேச மக்கள் என யாவரும் இந்த நிகழ்வில் பங்கு கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (த26)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1964



மறைவு 09 . 05 . 2021

### தம்பையா ஞானச்சந்திரன்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா ஞானச்சந்திரன் நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா பொன்னம்மாவின் அன்பு மகனும், திருமேனி சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், விஜயாவின் அன்புக் கணவரும் அமரர் பகிரதி மற்றும் கஜனி, மயூரதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், அருந்தவராணி ஆகியோரின் சகோதரனும், யோகராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் அச்சுவேலி வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1927



மறைவு 09 . 05 . 2021

### திருமதி இராசையா மாணிக்கம்

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா மாணிக்கம் நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் இராசையாவின் அன்பு மனைவியும், இரத்தினேஸ்வரி (கனடா), ஸ்ரீகந்தராசா (ஓய்வுபெற்ற படக்காப்பாளர் நீர்ப்பாசனத்திணைக்களம்), இராஜேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பொன்னையா நடராசா, றமணி ஸ்ரீகந்தராசா, கதிரவேலு தர்மபாலன், இராமலிங்கம் சிவசோதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், முருகதாஸ்-தேவிகா, வேல்தாஸ்-அனோஜா, சண்முகதாஸ் (அமரர்), கீதாஞ்சலி, கிஷோகாந் (அமரர்), வினோகாந், நிஷான்-தாரகா, நீரஜா-கஜேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும், பிரதிஷா, அஷீதா, சஸ்வதி, லக்ஷிகா, மகி, ஒல்சோன், சாங்கீத், மிதுர்ஷன், விஸாகா, ஹர்னிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 650 5149

தகவல்:
மகன்:- இ.ஸ்ரீகந்தராசா

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 02 . 1940



இறப்பு 09 . 05 . 2021

### திருமதி தையல்நாயகி கந்தையா

யாழ்ப்பாணம் வடமராட்சி, வதிரி ஞானியார் வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தையல்நாயகி கந்தையா நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் குலசிங்கம் கந்தையா (முன்னைநாள் ஆசிரியர்/அதிபர்) இன் அன்பு மனைவியும், அமரர் சிதம்பரப்பிள்ளை நமசிவாயம் அவர்களின் அன்பு மகளும், அமரர் சின்னம்மா நமசிவாயம் அவர்களின் அன்பு மகளும், அமரர் பாலசிங்கம், அமரர் நடராஜா (நில அளவை திணைக்களம்) இராஜேந்திரா (இளைப்பாறிய தபாலதிபர், கனடா), செல்வசோதி, (கனடா, யோகா மாஸ்டர்) ஆகி யோரின் அன்பு சகோதரியும், இரவிசங்கர் (இங்கிலாந்து), அமரர் குலசங்கர், நிவேதிகா (இங்கிலாந்து), நந்திகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்ஷா, ஜெகநாதன், சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதர்ஷன், கௌதம், சௌமியா, ஜெனிஷா, நட்டாஷா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், சிறீதரன் (சுவிற்சலாந்து), சித்திரா (கனடா) ராதிகா (சுவிற்சலாந்து), கௌசிகா (கனடா), பிரதிபா (கனடா), கீதா, ஶ்ரீப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்பு அத்தையும், யோனத்தன், ஜெனிதா ஆகியோரின் அன்பு அத்தையும், அமரர் பாறுபதி, பத்மாசினி ஜூடியின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, ஆலங்கட்டை மயானத்திற்கு தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

| | |
|---|---|
| மகன் இரவிசங்கர் | - 0044 7859922679 |
| நிவேதிகா | - 0044 7449898242 |
| நந்திகா | - 001 6478964610 |
| இராஜேந்திரா | - 001 9058378559 |
| செல்வசோதி | - 001 4166175721 |

## விபத்தில் காயம்

வலி.தென்மேற்கு, மே 10

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் பரந்தன் முல்லை பிரதான வீதியில் முச்சக்கர வண்டி ஒன்றும் உந்துருளி ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் உந்துருளியில் பயணித்த கல்மடு நகர் கிளிநொச்சியைச் சேர்ந்த ப.பவிதரன் (வயது-23) என்பவரே காயமடைந்து புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-115)

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 12 . 1948



இறப்பு 09 . 05 . 2021

### கதிரவேலு நாகேஸ்வரி

கில்னர்லேன், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி கதிரவேலு நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா லட்சுமியின் அன்பு மருமகளும், கதிரவேலு அவர்களின் அருமை மனைவியும் ஸ்ரீகணேசகுமாரின் பாசமிகு தாயாரும், சுகிதாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நமசிவாயம் இன் மைத்துனியும், காலஞ்சென்ற மகாலிங்கம், நகுலேஸ்வரன், அமரர் பொன்மலர், வரதாம்பிகை, சிவகுமார், சுகுமார், ஜெயலலிதா, ராஜ்குமார் இன் அன்பு சகோதரியும், புவனேஸ்வரியின் மைத்துனியும், வித்யாசினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2021)திங்கட்கிழமை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன்
பெறாமகன் : 076 137 8988

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதியிலிருந்து வெளியேற்றி வீட்டுக்கு அனுப்ப வேண்டாம்

### தொழில்நுட்ப பிரிவு மாணவர்கள் பல்கலை துணைவேந்தரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

இன்னமும் மூன்று மாதங்களில் பரீட்சையை எதிர்கொள்ளவிருப்பதால் தற்போதைய சூழலில் தம்மை வீட்டுக்கு அனுப்பாது தொடர்ந்தும் விடுதியிலிருக்க அனுமதிக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பிரிவின் 4ஆம் அணி மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கோரியுள்ளனர்.

119 மாணவர்கள் இணைந்து மேற்படி கோரிக்கைக் கடிதத்தை துணைவேந்தருக்கு அனுப்பி வைத்துள்ளனர். கிளிநொச்சி வளாகத்தில் தங்கியுள்ளவர்களில் தற்போது பரீட்சைக்குத் தோற்றும் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் 470 மாணவர்களைத் தவிர, ஏனையோரை விடுதிகளிலிருந்து வீட்டுக்கு அனுப்பும் தீர்மானம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இன்னமும் மூன்று மாதங்களில் பரீட்சையை எதிர்கொள்ளவிருக்கும் தொழில்நுட்ப பிரிவின் 4ஆம் அணி மாணவர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தற்போதைய சூழலில் தாம் வீட்டுக்குச் செல்லும்போது பெரும்பாலும் பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்தவேண்டி இருக்கும். இதனால் தொற்றுக்குள்ளாவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே மூன்று மாதங்களின் பின்னர் வரவுள்ள பரீட்சையை எதிர்கொள்ளும் வரையில் தம்மை விடுதியிலிருந்து வீட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று அவர்கள் கோரியுள்ளனர். (ஒ-5)

# ஆய்வின் பின்னரே தடுப்பூசியில் மாற்றம்

## இராஜாங்க அமைச்சர் உறுதி



**கொழும்பு, மே 10**

**கலப்பு முறையில் தடுப்பூசி ஏற்றுவதில் எந்தப் பாதிப்பும் இல்லை என்பது விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே, மாற்று தடுப்பூசி செலுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அஸ்ராஜெனகா தடுப்பூசியை முதற்கட்டமாக ஏற்றிக்கொண்டவர்களுக்கு, அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியை வழங்குவதற்கு அரசு இதுவரை எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்வில்லை. முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசி ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக வழங்குவது, ஒத்துப்போகக்கூடியது மற்றும் பாதுகாப்பானது என்று விஞ்ஞான ரீதியான ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அவ்வாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.


அதற்கான ஆய்வுப் பரிசோதனையை தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கவனம் செலுத்தி வருகின்றோம்.

அஸ்ராஜெனகா தடுப்பூசியை முதற்கட்டமாக ஏற்றிக்கொண்டவர்களுக்காக அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்கு மேலும் 6 லட்சம் வரையான தடுப்பூசி பற்றாக்குறையாகவுள்ளது.

என்றாலும், பற்றாக்குறையாக இருக்கும் அஸ்ராஜெனகா தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான அனைத்து வகையான முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் -என்றார். (ம-4)

சத்திரசிகிச்சை

## முகக்கவசத்துக்கு பெரும் தட்டுப்பாடு



கொழும்பு, மே 10

சத்திரசிகிச்சை முகக்கவசம் உள்பட கொரோனா பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அகில இலங்கை தாதியர் சங்கத்தின் செயலர் மெதிவத்த தெரிவித்துள்ளார்.

சத்திர சிகிச்சை முகக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களை விரைந்து வழங்காவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## 60 ஆயிரம் கட்டில்கள் 6 மருத்துவமனைகள்

கொழும்பு, மே 10

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை வகைதொகையின்றி அதிகரித்துச் செல்வதால் 6 மருத்துவமனைகளை புதிதாக ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என கொரோனா அவசர சிகிச்சை மற்றும் சுகாதாரக் கட்டமைப்புக்கான முன்னாயத்த செயற்திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

'கொரோனா நோயாளர்களுக்காக 60 ஆயிரம் கட்டில்களைத் தயார்செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டிலுள்ள 32 மருத்துவமனைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றும் செயற்றிட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிறைவு பெறும்' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)



## நாடு முழுவதும் பிரார்த்தனை


கொழும்பு, மே 10

மிகத் தீவிரமாகி வரும் கொரோனாத் தொற்றிலிருந்து உலகம் விடுபட வேண்டி, நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் மாலை சர்வமதப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இந்து ஆலயங்கள், பள்ளிவாசல் மற்றும் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் என்பவற்றில் இந்தப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அத்துடன் விசேட யாகமும் நடத்தப்பட்டது. உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட்டு சுபீட்சமான ஒரு வாழ்வு மலரவும், இலங்கை வாழ் மக்களின் நன்மைக்காகவும் இந்தப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. (ம-4)

## இரண்டாவது 'டோஸ்' 190,000 பேருக்கு



கொழும்பு, மே 10

நாட்டில் கொரோனாத் தடுப்புக்கான தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஒரு லட்சத்து 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஊசியின் முதல் 'டோஸ்' 9 லட்சத்து 29 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்குச் செலுத்தப்பட்டது.

எனினும் இரண்டாவது 'டோஸ்' செலுத்துவதற்குத் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

மீண்டும் கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகளின் அடிப்படையில் முதல் 'டோஸ்' பெற்றவர்களுக்கு இரண்டாவது 'டோஸ்' செலுத்தும் நடவடிக்கைகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இதுவரை ஒரு லட்சத்து 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, சீனாவின் தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தடுப்பூசியின் இரண்டு தொகுதிகளும் இலங்கையிலுள்ள சுமார் 3 ஆயிரம் சீன நாட்டவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## கட்சிப் பதிவுக்கு 40 விண்ணப்பங்கள்

புதிய அரசியல் கட்சிகளின் பதிவுக்காக, 40 கட்சிகள் விண்ணப்பித்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இவற்றில் 18 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
Bajaj Boxer-VD / Hero Honda CD Down-TF / Hero Honda Super Spender-TD ஆகிய மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு.
077 898 9691 யாழ்ப்பாணம்

# தொலைபேசி, கணனி பாவனையால் சிறார்களின் மனநிலை பாதிக்கும்

*மனநல மருத்துவர் ஆலோசனை*

**கொழும்பு,மே 9**
**சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசி அல்லது கணனியின் திரையை தொடர்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு கண் மற்றும் மனநிலைப் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் என்று கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் மனநல விசேட மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கையடக்கத் தொலைபேசி மற்றும் கணணியைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதனால், நீண்டகால தலைவலி மற்றும் தலைச்சுற்றல் போன்ற பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

தற்போது சிறுவர்கள் வீட்டுக்குள் சிக்கி இருப்பதால், அவர்கள் கணனிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே இது தொடர்பாக பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (ப-4)

## நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபலமான காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைக்கு பதவி வெற்றிடம் உள்ளமையால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.



**பதவி நிலை - 1**
**PAC Wealth Planner**
வேலை அனுபவம் : 2 வருடங்கள்
வயது : 25 - 40
சம்பளம் : 40, 000 (நிரந்தரம்)

**பதவி நிலை -2**
**Wealth Planner Manager**
வேலை அனுபவம் : 2 வருடங்கள்
வயது : 25 - 40

**பதவி நிலை - 3**
**Wealth Planner**
வயது : 19 வயதிற்கு மேற்பட்டவர்கள்
முழுநேரமாகவோ / பகுதிநேரமாகவோ பணிபுரியலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் உங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை 076 523 1730 என்ற இலக்கத்திற்கு SMS மூலமாக அனுப்பி வைக்கவும்.

**Note :** நிதி நிறுவனம், தனியார் துறை ஆசிரியர்கள் ஆகிய துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

## நினைவஞ்சலி

**41ஆவது ஆண்டு**



பிறப்பு 09 – 10 – 1903
இறப்பு 14 – 04 – 1980

**அமரர் பரமு விநாயகம்**
(முன்னை நாள் பிரதம தபால் அதிபர்– யாழ்ப்பாணம்)
திதி : சித்திரை அபரபக்க சதுர்த்தசி

**26ஆவது ஆண்டு**



பிறப்பு 07 – 02 – 1910
இறப்பு 05 – 01 – 1995


**அமரர் விநாயகம் வள்ளிப்பிள்ளை**
திதி : மார்கழி வளர்பிறை சதுர்த்தி

உயரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ் சேர்த்து
எம்மை விட்டகன்று நீங்கள்தான் அப்பா
பதிபதம் இணைந்து பத்தினியாய் வாழ்வீரம்மா!

கந்த உடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை

மகள் : திருமதி பத்மாசனி துரைராஜா
மகன் : திரு. விநாயகம் சிவகுமாரன்

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 01 . 1937
மறைவு 25 . 04 . 2017

**அமரர் செல்லையா மகாதேவன்**


இவ்வுலகை பிரிந்து ஆண்டுகள்
நான்கு ஆனாலும்
எம் உள்ளத்திலும் வாழ்விலும்
என்றும் பசுமையாக வாழும் எம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

கோப்பாய் வீதி,
1ஆம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 11 . 1977
மறைவு 13 . 04 . 2021

**செல்வன் சோதிலிங்கம் மோகனதாஸ்**

கோப்பாய் மத்தி காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் மோகனதாஸ் அவர்கள் கடந்த (13.04.2021) அன்று காலமானார்.

அன்னார் சோதிலிங்கம் புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், யசோதா, கவிதா, தனுதாஸ் ஆகியோரின் பாசமிகு அண்ணாவும், காலஞ்சென்ற கிருஷ்ண பாலசிங்கம் மற்றும் இராசரத்தினம், கனகரத்தினம், புஸ்பலதா ஆகியோரின் பெறாமகனும், சிவநாதன், செல்வராஜா ஆகியோரின் மருமகனும், துஸ்யந்தன், தயாளன் ஆகியோரின் ஆசை மச்சானும், டவினா, மகிழன், தர்வின் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2021) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சோதிலிங்கம்- 33389444502**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து)

கிளைரீதியாக வாக்களிக்க தகைமையுடைய வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்
30.06.2021ம் திகதியுடன் முடிவுறுத்தப்படவுள்ள தகைமையுடைய வாக்காளர் பட்டியல் கிளைரீதியாக 10.05.2021 தொடக்கம் 28.05.2021 வரையான காலப்பகுதி வரை காட்சிப்படுத்தப்படுகின்றது. இந்த வாக்காளர் பட்டியலில் தகுதியிருந்தும் தமது பெயர், முகவரி இடம் பெறாது இருந்தாலோ அல்லது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் 29.05.2021ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "செயலாளர் " வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி பருத்தித்துறை வீதி புத்தூர் என முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவே ஒப்படைத்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
சங்கத்தின் இயங்கும் கிளை நிலையங்களில் அந்த அந்த கிளைக்கான வாக்காளர் பட்டியலும் இயங்காது உள்ள கிளைநிலையங்களில் பின்வரும் விபரப்படியான கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் சங்க தலைமை அலுவலகத்திலும் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

| இல | கிளைநிலையப் பெயர் | காட்சிப்படுத்தப் படும் கிராம சேவையாளர் பிரிவு | இல | கிளைநிலையப் பெயர் | காட்சிப்படுத்தப் படும் கிராம சேவையாளர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| 01 | பத்தமேனி 02 | J/281 | 07 | அச்சுவேலி வடக்கு 19 | J/285 |
| 02 | தம்பாலை 03 | J/282 | 08 | கதிரிப்பாய் 18 | J/282 |
| 03 | வளலாய் மேற்கு 06 | J/284 | 09 | கருகப்பை ஈஸ்வரன் 23 | J/278 |
| 04 | புஸ்பவதி 07 | J/285 | 10 | கலைமதி 25 | J/273 |
| 05 | சூரியோதயம் 15 | J/272 | 11 | வளர்மதி 26 | J/274 |
| 06 | நாவற்காடு 16 | J/286 | | | |

ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் அடிப்படையில் கிளைக்குழுத் தெரிவுகள் நடாத்தப்படும்.

தலைவர் செயலாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள

- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.

தொடர்பு:076 316 5734, 077 985 1946
e.mail: jenoshanark@gmail.com

## ஒத்துமாறல்

01.04.2021 Ministry of Public Service Provincial Service & Local Government வவுனியாவில் நிரந்தர நியமனத்தைப் பெற்று யாழ்ப்பாணத்தில் சேவை செய்ய விரும்பும் அரச உத்தியோகத்தர்கள் ஒத்துமாறல் செய்ய தொடர்பு கொள்ளவும்.

077 821 4059, 077 888 1375

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/நடேஸ்வராக் கல்லூரி** காங்கேசன் துறையில் 2000ஆம் ஆண்டிற்கு பின் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் (2020ஆம்) கலைப் பிரிவில் **100% சாதனை படைத்த** மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 1 | செல்வி ஞா. சத்தியா | 2 | 1 | | |
| 2 | செல்வி இ. மதிஸ்ரா | 1 | 1 | 1 | |
| 3 | செல்வி செ. டக்சிகா | 1 | 1 | 1 | |
| 4 | செல்வன் க.டினோஜன் | | 3 | | |
| 5 | செல்வன் சி. சயிந்தன் | | 1 | 1 | 1 |
| 6 | செல்வி செ. நிரோஜினி | | | 3 | |
| 7 | செல்வன் ச. சசிப்பிரியன் | | | 1 | 2 |


இம் மாணவர்களிற்கு கற்பித்த ஆசிரியர்களையும் ஒத்துழைத்த பெற்றோர்களையும் ஊக்கப்படுத்திய பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளையும் வழிப்படுத்திய அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**"வீழ்ந்தாலும் மீள் எழுவோம்"**

வாழ்த்துவோர்
**நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**ஐரோப்பா**

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 03 - 1950



மறைவு 09 - 05 - 2021

### திரு. சூசை ஆபிரகாம் (செபஸ்ரியான்)

குருநகர், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சூசை ஆபிரகாம் (செபஸ்ரியான்) நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை காமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மா, சூசை தம்பதிகளின் அன்பு மகனும், சந்திராவின் (றீற்றா பிலோமினா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செபமாலை, தாசியஸ், அருளம்மா மற்றும் எஸ்பிரியேல் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற மிக்கேல் மற்றும் ராசாத்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் றமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வன்னிபுரம், தம்பிதுரை, றாணி மற்றும் லலிதா ஆகியோரின் மைத்துனரும், மணிகிறேசியன், காலஞ்சென்ற மிக்கேல், ராசா மற்றும் கமலா, கொன்சி, சாந்தி, காலஞ்சென்ற ரவி, மற்றும் றாயன் (France), றாயி (France) ஆகியோரின் மைத்துனரும், புஸ்பா அவர்களின் அன்பு மாமனாரும், ஜெனுஷா, ஷானுஜா, ஷெறோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் இன்று (10.05.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
[illegible]
076 430 2356

9/8, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்.

## சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும் 10.05.2021




### செல்வி வசந்தி வைத்திலிங்கம்

பயிற்றப்பட்ட ஆசிரியர் : **மனைப்பொருளியல்**
**இலங்கை ஆசிரியர் சேவை - தரம்-I**

**சேவை விவரம்**

1. கைதடி கலைவாணி வித்தியாசாலை - 14.01.1989 - 03.04.1991
2. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி கோப்பாய் - 04.04.1991 - 31.12.1992
3. யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி - 01.01.1993 - 14.03.2015
4. யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி - 15.03.2015 - 09.05.2021

ஈழ மணித்திருநாட்டில் பெருமை பெறும்
கோண்டாவில் பதிதனில் பிறந்து வளர்ந்துமே
குற்றமறக் கல்வியினைக் கற்று குணக்குன் றென உயர்ந்து நின்றாய்
மனைப்பொருளியல் பாடத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்று
மாதர் தமக்குப் பெருமை சேர்த்தாய்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே பயிற்சி பெற்று
ஆர்வமாக மாணவர் சமூகத்திற்கு அரனாய் நின்றுமே
ஆக்கத்துடன் அவர்தம் உயர்விற்காய்ப் பணிபுரிந்தாய்
ஆசிரியரோடு உறவுநிலை பேணி ஆதரவாய் கதைபேசி மகிழ்ந்திருந்தாய்
கல்விச் சாலையிலே பற்பல பணிகளோடு
கண்ணியமாய் ஆலோசனையும் வழிகாட்டலும் பணியையும்
கண்ணெனக் கருதியே ஆற்றி வந்தாய்
விருந்தோம்பும் பண்பில் மிக உயர்ந்த உம் பண்பை
கல்விக் கூடத்தின் நிகழ்வுகளில் கண்டு நின்றோம்
அகவை அறுபதிலே இளைப்பாறும் இவ்வேளை
ஆண்டவன் அருளினால் நீடு காலம் வாழ்க வாழ்கவென
அன்போடு அகம் குழைந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் : கல்லூரிச் சமூகம்
**யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 - 03 - 1945



உதிர்வு 10 - 04 - 2021

அமரர் திருமதி
### வீரசிங்கம் பரமேஸ்வரி

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
கண்மூடி விழிக்கும் முன்னே எம்மைக்கடந்து விட்டீர்கள்
31 நாள்கள் என்றென்றும் எங்களுடன் இணைத்திருப்பீர்கள் - என
எண்ணிலாக் கனவுகள் கண்டிருந்தோம் - அம்மா
இடைநடுவில் எம்மை தவிக்கவிட்டு ஏன்
மறைந்து விட்டீர்கள் - என்றென்றும் குடியிருப்பீர்கள்
எம் இதயங்களில் எம் வாழ்வுவரை
நிழலாய் தொடர்வீர்கள்.

[illegible]
[illegible] மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2021

01. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)** கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 10.05.2021 **ம் திகதியிலிருந்து** 24.05.2021 **ம் திகதி வரை வேலை நாட்களில் காலை** 09.00 **மணிமுதல் பி.ப** 14.00 **வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- **(வரிநீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்,** என்னும் முகவரிக்கு 25.05.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழு விற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகள் கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 **(அறுபத்து மூன்று** – 27.07.2021) நாட்களாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு (வல்லை வீதி 1ம் ஒழுங்கையின் கிளை ஒழுங்கைகள் மற்றும் வல்லை வீதி 3ம் ஒழுங்கை, அறிவகம் வீதி மற்றும் கரைச்சி மயான கிளை ஒழுங்கை(கல்வாரி ஒழுங்கை), தேவாலய முன் வீதி மற்றும் சங்கரத்தை 2ம் ஒழுங்கையின் கிளை ஒழுங்கை, நெல்விளான் வீதி) NP/14/41(17)/02/CF/01/2021 | 3.96Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 40,000.00 | 24.08.2021 |
| 02 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு– குழு I (மாவடி வீதி – சுழிபுரம், நெல்லியான் கிளை ஒழுங்கை மற்றும் குலனை கிளை ஒழுங்கை மற்றும் பெரியதம்பிரான் கிளை ஒழுங்கை, (இராமாலியன் வீதி), காளிகோவில் வீதி 2ம் ஒழுங்கை (விசவத்தனை பண்ணாகம் 4ம் ஒழுங்கையை இணைக்கும் வீதி) NP/14/41(17)/02/CF/02/2021 | 2.98 Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 24.08.2021 |
| 03 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு– குழு II (நெல்லியான் வீதியின் கிளை ஒழுங்கைகள் - சுழிபுரம், திக்கரை வீதியின் கிளை ஒழுங்கைகள் - தொல்புரம் மேற்கு, கல்விளான் முன்பள்ளி ஒழுங்கை மற்றும் RDS வீதியின் முன் ஒழுங்கை NP/14/41(17)/02/CF/03/2021 | 2.98Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 24.08.2021 |
| 04 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு – குழு III (காரைநகர் மானிப்பாய் வீதி 2ம் ஒழுங்கை மற்றும் சிறீகிருஷ்ண சனசமூக நிலைய வீதி, அம்மன் வீதியின் கிளை ஒழுங்கை – தொல்புரம், தேவாலய முன்ஒழுங்கை - மூளாய், ஒடுவம்புலம் வீதி - மூளாய் மற்றும் ஐயனார் வீதி 2ம் ஒழுங்கை - மூளாய், கம்மாலை வீதியின் கிளை ஒழுங்கை – பொன்னாலை NP/14/41(17)/02/CF/04/2021 | 4.46Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 45,000.00 | 24.08.2021 |
| 05 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு– குழு I (அற்கின்சன் வீதி, நாச்சாண்டி வீதி, மூளாய் வீதி 5ம் ஒழுங் கையின் கிளை ஒழுங்கைகள்) NP/14/41(17)/02/CF/05/2021 | 2.48 Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 25,000.00 | 24.08.2021 |
| 06 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு– குழு II (நொத்தாரிஸ் ஒழுங்கை, துணைவி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வீதி மற்றும் கிளை வீதிகள், பிரதான துணைவி வீதியின் கிளை ஒழுங்கை) NP/14/41(17)/02/CF/06/2021 | 2.96 Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 24.08.2021 |
| 07 | அராலி பகுதி வீதிகள் புனர மைப்பு – குழு I (ஆட்டுப் பட்டித்தெரு, வேப்பியனை ஒழுங்கை, ஐயனார் கோவில் வீதி அம்மன் கோவில் வீதி) NP/14/41(17)/02/CF/07/2021 | 3.77 Mn | 60 நாட்கள் | C8 /C7 வீதிப் புனரமைப்பு | 38,000.00 | 24.08.2021 |
| 08 | அராலி பகுதி வீதிகள் புனர மைப்பு – குழு II (அராலித் துறை வீதியின் 5ம், 7ம் ஒழுங் கைகள், செட்டிக்குறிச்சி பிள்ளையார் வீதியின் இடது பக்க 3ம், 4ம் மற்றும் வலது பக்க 1ம் ஒழுங்கைகள் NP/14/41(17)/02/CF/08/2021 | 1.96Mn | 60 நாட்கள் | C9 /C8 வீதிப் புனரமைப்பு | 20,000.00 | 24.08.2021 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 17.05.2021 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்.**
**10.05.2021**

# மாசேரி கூட்டம் ஒத்திவைப்பு

கொடிகாமம், மே 10

கொடிகாமம் மாசேரி கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவிருந்த நிலையில் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது தென்மராட்சி பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதால், குறித்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (து-159)

**லொறி விற்பனைக்கு**
லொறி இலக்கம் 28 ஸ்ரீ 9729
தொடர்பு: 077 102 3824

## தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தருமபரிபாலன சபை
## THUMPALAI NELLANDAI AMMAN TEMPLE BOARD OF TRUSTEES

**தும்பளை** Thumpalai — **பதிவு இல.**No - HA -5/JA/419 — **பருத்தித்துறை** Pointpedro
ஸ்தாபிதம் Estd 31.05.1945

**வருடாந்த வெளிமடை உற்சவ அறிவித்தல் என்ற தலைப்பில்** 07.05.2021 **வெள்ளிக்கிழமை அன்று பிரசுரமாகிய விளம்பரத்தில்** 16.05.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெற தீர்மானிக்கப்பட்ட தும்பளை நெல்லண்டை அம்மன் தரும பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் என்பதனை தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என திருத்திக் கொள்ளப்படுகின்றது.

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்**
**தரும பரிபாலன சபை.**
**06.05.2021**

## முக்கிய அறிவித்தல்

## அடகுநகை விற்பனை அறிவித்தல்
## ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

25.03.2020 ஆம் திகதி தொடக்கம் 30.05.2020 வரை அடகுவைத்த நகைகளை 10.06.2021 க்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும்.
தவறின் 10.06.2021 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
**(சந்தைக்கு அருகில்)**
**021 221 7287, 076 636 1238**

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 03 . 1961



மறைவு 21 . 04 . 2020

## அமரர் நல்லதுரை மோகனராசா

(நீராவியடி சைக்கிள் திருத்தும் கடை உரிமையாளர் – மோகன்)

**திதி : அபரபக்க சதுர்த்தசி (10.05.2021)**

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்று விட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் – நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்

**ஆனைப்பந்தி,**
**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**
**077 583 4951,**
**076 320 3887.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே 18...

முள்ளிவாய்க்காலில் மரணித்த அல்லது கொல்லப்பட்ட எமது உறவுகளின் 12ஆம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 18ஆம் திகதி தமிழ்த் தேசியத்துக்க தினமாக நினைவு கூரப்படவுள்ளது. கடந்த ஆண்டைப் போல பெருந்தொற்றுத் தாக்கத்துக்கு மத்தியில்தான் இந்த ஆண்டும் நினைவேந்தலை நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சட்டத்துக்கு உட்பட்ட வகையில் நிகழ்வுகள் நிச்சயம் இடம்பெறும். அன்றைய நாளில் காலை 10 மணிக்கு நாம் விளக்கேற்றி மௌன அஞ்சலி, மலர் அஞ்சலிகளுடன் நினைவேந்தலை ஆரம்பிப்போம். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அதற்கு ஏற்ற முறையில் பங்கெடுக்குமாறு மக்களைக் கேட்டுநிற்கிறோம்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணி ஒலிக்கவிடப்பட்டு அதைத் தொடர்ந்து, பொது இடங்களிலும், வீடுகளிலும் விளக்கேற்றி மௌன அஞ்சலி செலுத்தி நினைவேந்தலை நிகழ்த்துமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

(ம)

*(இது தொடர்பில் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி 9ஆம் பக்கத்தில்)*

## கோண்டாவிலில்...

தீயணைப்பு உத்தியோகத்தர்கள் தங்குமிடத்தில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. விமான நிலைய தீயணைப்புப் பணியாளரான பிரேம திலக (வயது44) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு உறக்கத்துக்குச் சென்ற இவர், நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடல் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரிய வரும் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-இ)

## இரண்டாவது...

கொவிட் தொற்றுக்குள்ளான 44 வயதான இந்தப் பெண் முல்லேரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். அவரது உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவர் காலி கராம்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சுமார் 11 நாள்கள் எக்கோ இயந்திர உதவியுடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-இ)

## யாழில்...

வடமராட்சி, உடுப்பிட்டியைச் சேர்ந்த 88 வயதுடைய ஒருவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த இந்த முதியவர், கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுப் பிற்பகல் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கு கொரோனாத் தொற்று காரணம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகம் அறிக்கையிட்டுள்ளது. உயிரிழந்தவரின் உடல் இன்று யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்தில் மின் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## யாழில் 15...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 486 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 பேரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தலா 2 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் மாதிரிகள் பெறப்பட்ட மூவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலாளர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 4 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, காரைநகர் பிரதேச மருத்துவமனை ஆகியவற்றில் சேர்க்கப்பட்ட தலா ஒவ்வொருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்படடுள்ளது.

கிளிநொச்சி, தர்மபுரம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொது மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொது மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ-26)

## நினைவேந்த...

செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நாளைமறுதினம் ஆரம்பமாக வுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளில், முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவுகூரல் நடைபெறுவது வழமை. அதற்கான அனுமதியை அரசு வழங்குமா? என்று தொடர்பில் இராணுவத் தளபதியிடம் வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 3ஆம் திகதியிலிருந்து சகல அரச மற்றும் தனியார் நிகழ்வுகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. தேசிய வெசாக் நிகழ்வு கூட நிறுத்தப்பட்டுள்ளது. கொரோனா கட்டுப்பாட்டுக்காக விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் மக்கள் ஒன்று கூடுவதை அனுமதிக்க முடியாது. தமிழ் அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடிக்க அனுமதிக்கக்கோருவது வியப்பாக இருக்கின்றது.

நினைவுகூரலுக்காக மக்கள் முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றுகூடினால், அரசியல்வாதிகள், மக்கள் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் கைதுசெய்யப்படுவார்கள்.

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை நாம் மறுக்கவில்லை. வீடுகளில் தனித்து அதனைச் செய்வதில் எமக்கு ஆட்சேபனையில்லை- என்றார். (ஒ5,22)

## கைதடியில்...

இந்த உணவகத்துக்குப் பலர் சென்று வருவதால், தொற்று பலருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. கைதடி பிரதேச மக்கள் மற்றும் கைதடியில் உள்ள உணவகத்துக்குச் சென்றோர் கொரோனாத் தொற்று அறி குறிகள் காணப்பட்டால் பி.சி.ஆர். பரிசோதனை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-159)

## யாழ். மேலதிக...

பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நேற்றிரவு முடிவுகள் வெளிவந்தன. தெல்லிப்பழை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் மாதிரிகள் வழங்கிய மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர்.

இவருடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக செயலர் சிகிச்சைக்காக கிருஸ்ணபுரம் கொவிட் சிகிச்சை மையத்துக்கு அனுப்பப்படுவார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-23,26)

## கர்ப்பிணிகளை...

தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு அரச பணியாளர்களை கடமைக்கு அமர்த்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய புதிய சுற்றறிக்கை ஒன்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் இன்று வெளியிடப்படவுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் மாற்றம் செய்யப்பட்டு, அரச திணைக்களம் ஒன்றில் கடமைக்கு அமர்த்தும் பணியாளர்கள் தொடர்பான புதிய கொள்கை வெளியிடப்படவுள்ளது.

இந்தப் புதிய நடைமுறைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 2,672

"சென் தலைவரும், இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்ட பின்னர், நாளொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகளவான கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை இதுவாகும்.

கடந்த இரு வாரங்களில் நாட்டில் நாளாந்தம் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வந்தனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 906 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 463 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளனர். 20 ஆயிரத்து 657 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றால் மேலும் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என நேற்றிரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-22)

## வட்டுக்கோட்டை,...

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. நேற்று மாலை வரையான தரவுகளின்படி 17 ஆயிரத்து 985 தொற்றாளர்கள் சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை நிலையங்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நாவற்குழி அரச களஞ்சியத்தில் 300 நோயாளர் படுக்கைகள் கொண்ட சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் வசாவிளான் கட்டடத்தில் இடவசதிக்கு அமைவாக நோயாளர் படுக்கைகளை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரச களஞ்சியம் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றில் மலசலகூடங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்பு இராணுவத்திடம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கைதடியில் நேற்று...

சென்ற வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் இரும்புக் கம்பியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதேவேளை, வடபிராந்திய போக்குவரத்து சபையின் காரைநகர் சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டையிழந்து பிரதான வீதியைவிட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து கைதடி பாலத்துக்கும் - கைதடி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் ஏ9 வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது. கைதடி பாலத்தைக் கடக்கும்போது வேகக் கட்டுப்பாட்டையிழந்த பஸ் வீதியைவிட்டு விலகிச் சென்றுள்ளது. கடும் மழை பொழிந்து கொண்டிருந்த போதே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# யாழ். வரலாற்று சின்னங்களை பாதுகாக்க மரவுரிமை மையம்

யாழ்ப்பாணம், மே 10

**யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களான மந்திரிமனை, சங்கிலியன் அரண் மனை மற்றும் யமுனா ஏரி போன்றவற்றைப் பாதுகாத்து அவற்றை மீள்நிர்மாணம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் மரவுரிமை மையம் என்னும் அமைப்பு நேற்று ஆரம்பிக்கப்**

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப் பில் 11 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட் டுள்ளனர். அதன் தலைவராக வரலாற் றுத் துறை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவு செய்யப்பட் டுள்ளார்.

உப தலைவர்களாக மருத்துவ கலாநிதி பேராசிரியார் ரவிராஜ் மற்றும் நடராஜா சுகிதராஜ் ஆகியோரும், செயலாளராக மருத்துவபீட பதிவாளர் ராஜேந்திரம் ரமேஸ், துணைச் செயலாளராக பாசுப் பிரமணியம் கபிலன், பொருளாளராக பேராசிரியர் செல்வரட்ணம் சந்திரசேக ரம், இணைப்பாளராக சிவகாந்தன் தனுஜன், பதிப்பாசிரியராக வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

மையத்தின் உறுப்பினர்களாக விஸ்வ லிங்கம் மணிவண்ணன், விஸ்வபால சிங்கம் மணிமாறன் மற்றும் பூவான சுந்தரம் ஆரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுமக்களின் பங்களிப்புடன் இந்த அமைப்பு வரலாற்று சின்னங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுப டும். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அனைத்திலும் உள்ள வரலாற்று சின்னங் களையும் பாதுகாக் கும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப் படும் என்று தெரி விக்கப்பட்டது.

(எ-26,20)

## கொடிகாமம் -பருத்தித்துறை பிரதான வீதி திறக்கப்பட்டது

### கிராமங்களுக்குள் செல்ல தடை நீடிப்பு

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதி போக்குவரத்துக்கு நடவடிக்கைக்காக திறந்து விடப் பட்டுள்ளது. கொரோனா அச்சு றுத்தல் காரணமாக தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய பகுதி கடந்த 5ஆம் திகதி தொடக்கம் முடக்கப்பட்டுள்ளது. இதனால் கொடிகாமம் பருத்தித்துறை வீதி ஊடான போக்குவரத்தையும் பொலிஸார் மற்றும் இராணுவத்தி னர் தடை செய்திருந்தனர்.

தென்மராட்சி மற்றும் , வட மராட்சி பிரதேசங்க ளுக்கு சென்றுவருவோர் பல சிர மங்களை எதிர்கொண் டனர். இது தொடர்பில் மாவட்ட திணைக்கள அதிகாரி களுக்கு முறையிடப்பட்டிருந்த நிலையில், குறித்த பிரதான வீதி திறக்கப்பட்டுள்ளது. (த-159)

**வேலைக்கு ஆள் தேவை**
யாழ்நகரில் உள்ள குளிர்பான நிலையத்துக்கு
முன் அனுபவம் உள்ள வேலை ஆள் தேவை.
தொடர்பு: 077 644 5529

**உயிரியல் A/L**
தனி/குழு வகுப்புகள் வவுனியா / கிளிநொச்சி/ யாழ்/ வடமராட்சி / தென்மராட்சி Home Visited Tamil / English.
P.R.N இந்திரா வளவாளர் 077 665 5290

**English Classes**
தனி மற்றும் குழு வகுப்புக்கள்
Grammar with Syllabus
(வீடு வந்து கற்பிக்கப்படும்)
077 331 4608

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்
(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)
தொடர்பு: 077 468 3354, 077 288 0152
074 075 4204

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு எனும் எமது இலக்கினை 6ஆவது வருடமாகவும் அடைந்த பெருமையுடன் வெற்றிக்கு வித்திட்ட அதே ஆசிரியர் குழாத்தின் வழிகாட்டலில்
A/L 2021 மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்புக்கள்,
A/L 2022, 2023 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Day Batch வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
வகுப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக நிகழ்நிலை (Zoom) இல் நடைபெறுகிறது.
அனைத்துப்பிரிவுகளுக்கும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
076 552 9093 / 021 221 7860

**வேலை வாய்ப்பு**
தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை. தகைமை O/L, A/L
077 572 9724

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 - 07 - 1953



இறப்பு 09 - 05 - 2021

### சிவலிங்கம் மீனலோசனி (சந்திரா)

நந்தாவில் கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவலிங்கம் மீனலோசனி நேற்று (09.05.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா நாகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மூத்த புதல்வி யும், காலஞ்சென்ற அரியரத்தினம் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவலிங்கம் (ஆனந்தன்) அவர்களின் அன்பு மனைவியும், மதனலோசனி (கனடா), ரவீந்திரன் (கனடா), புஸ்பராணி, ஜெயராணி (கனடா), நிர்மலலோசனி ஆகியோரின் அன்பு சகோதரியும், தனுஜா (தனு பொறியியலாளர் இலங்கை மகாவலி அதிகார சபை), கார்த்திகா (வினு) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணதீபன் (சத்திர சிகிச்சை நிபுணர், கொழும்பு), அருணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிகிலாஷ் (கல்கிசை பரி.தோமாவின் கல்லூரி), அஜிந்த் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), விஜீஷ், விகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ராம சந்திரன், சிவேந்திரன், லீலாவதி, யோகராணி, மனோரஞ்சிதம், சுந்தரநேசன் மற்றும் மகேந்தி ரராஜா பாலச்சந்திரன், சத்தியமூர்த்தி, செல்வரஞ்சிதம், சிவநேசன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**021 205 2718**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 13 . 06 . 1942



உதிர்வு 10 . 04 . 2021

### திருமதி பிரியதர்சினி ஈஸ்வரானந்தன்

**அவர்களின் 31ஆம் நாள் நினைவுகளை நெஞ்சினில் நிறுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியை அறிந்து, நேரடி யாகவும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசு ரங்கள் மூலம் அனுதாபங்களை வெளிப்படுத்தியோருக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தற்போது நாட்டில் நிலவும் கோவிட் - 19 தொற்று காரணமாக, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விற்கு அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

**528, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 10. 05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.